நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்

# நான்

உளவியல் மஞ்சரி

மலர் 10

இதழ் 4



# தாம்பத்தியம்

ஆடி - ஆவணி

# நான்

உளவியல் மஞ்சரி

மலர் 10
இதழ் 4

ஆடி - ஆவணி
1984

'நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்'

ஆசிரியர்:
வின்சன்ற் பற்றிக் O M.I., B.A.

இணை ஆசிரியர்:
ஜீவா போல் O. M. I , B. Th.

துணை ஆசிரியர்கள்:
ஸ்ரனி அன்ரனி
பீற்றர்
ராஜன் மங்களா
ஜீவனதாஸ்

தொடர்பு:
F. L. N. குரூஸ்
லீனஸ் சொய்ஸா,

விளம்பரம்:
செபஸ்ரியன்

விநியோகம்:
நீக்கிலஸ்

ஆலோசகர்கள்:
வண. E. யேசுதாசன் O. M. I.
வண. H. ஜெபநேசன் M. A.
வண. M. போல் O M. I., B. Th.
வண. J. லம்பேட் O. M. I.



முகவரி:

''நான்''
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்


அடுத்து வெளி வருகின்றது;

## குடும்பம்

உங்கள் ஆக்கங்களை
உடனே அனுப்பி வையுங்கள்

இவ்விதழில்

- ★ இல்லறத்தை இனிமையாக்குங்கள்
- ★ மனைவிக்கு ஒரு மடல் (கவிதை)
- ★ கலைந்துபோன ராகம்
- ★ தாம்பத்தியம் ஒரு நல்வீணை
- ★ அவளின் அரவணைப்பில் (சிறுகதை)
- ★ 'நான்' கேள்வி - பதில்கள்

**கருத்துக் குவியல் இல. 34**

"ஒரு குடும்பத்தின் ஒழுங்கான அமைப்பு கணவனுக்கு மனைவி அடங்கி வாழுதலிலேயே தங்கியுள்ளது."

உங்கள் கருத்துக்களை சார்பாகவோ அல்லது எதிராகவோ எழுதி ஆவணி 31ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வையுங்கள்.

சந்தா விபரம்:

| | |
|---|---|
| ஈராண்டு சந்தா | ரூ. 28-00 |
| ஓராண்டு சந்தா | ரூ. 15-00 |
| தனிப்பிரதி | ரூ. 2-25 |

பணம் பெறும் கந்தோர்:
கொழும்புத்துறை.

# இரண்டு கண்கள் இரண்டு காட்சி காண முடியுமா?



**இதய வீணை தூங்கும் போது பாடமுடியுமா?**
**இரண்டு கண்கள் இரண்டு காட்சி காணமுடியுமா?**
**இரண்டு மனங்கள் ஒன்றிணையாது, தாம்பத்தியம் தளிர்விடுமா?**

ஓர் உள்ளம் இன்னொரு உள்ளத்தின் வளர்ச்சிக்காக, மகிழ்ச்சிக்காக, இரு ஆட்கள் ஒருமித்த மனத்தோடு ஒருவரை ஒருவர் பங்கீடு செய்தலே திருமணம் ஆகும். ஒருவர் ஒருவருக்காக இருவர் செய்து கொள்கின்ற தியாகத்தின், தூயஅன்பின்வெளிப்பாடே தாம்பத்தியத்தின் தார்ப்பரியமாகும். திருமணத்திற்கு உருக்கொடுப்பது உண்மையான அன்பேயாகும். அவர(ள)து நலனே தனது நலன் என்றும் அவர(ள)து இன்பமே தனது இன்பம் என்றும் அவர(ள)து வளர்ச்சியே தனது வளர்ச்சி என்று இருவரும் அவர்(ள்) – மையமாக தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் போது தாம்பத்திய வாழ்க்கை இனிமைபயக்கும். கொள்கை ரீதியிலே, கருத்து ரீதியிலே, பண்பாட்டு ரீதியிலே, பணிந்துநடக்கும் தன்மையிலே ஒற்றுமை காணப்படும் பொழுது இல்லறம் நல்லறமாக காட்சியளிக்கும். அதே வேளை கருத்து வேறுபாடுகள் காணப்படினும் அவற்றை பெரிது படுத்தாது பெருந்தன்மையோடு நடந்துகொள்ளும் பொழுது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையில் விளங்கிக்கொள்ளும் செயலாற்றலில் வளர்ச்சியுறும் பொழுது வாழ்க்கை வளம் பெறும். இதயமும் இதயமும் இணைந்த நிலையில் மலருகின்ற இல்லற வாழ்க்கையில் சுமைகள் கூட சுவையாகவே தோன்றும்.

வாழ்க்கையில் ஏற்படும் இன்னல், இடைஞ்சல்கள், வறுமை, பிணி, தவறுகள் போன்ற அனைத்தும் மனப்பொருத்தத்தினால் விளைவுற்ற நெரிசலினால் மறைவுற்று விடும். இரண்டுகண்கள் சேர்ந்து ஒரே காட்சியை காண்பது போல இரண்டு இதயங்கள் சேர்ந்து ஒரே அன்பினை பகிர்ந்து ஒரே இன்பத்தை அனுபவிக்கும் பொழுது இறைமாட்சி இல்லறத்தில் துலங்கும்.

— **ஆசிரியர்**

# மனைவிக்கு

புது மணப்பெண்ணாய்
புக்ககம்
புகுந்த நாள்முதல் – சமையல்
புத்தகம் பார்த்து, விதம்
விதமாய் சமைத்து
பதமாய் இறக்கி
இதமாய் தருகின்றாய்;
அவற்றின் பெயரைப்போல
அவையும்
வாயுள் நுழைய மறுக்கின்றன.
மீறிச் சென்றவை
செமிக்காமல்
சேமிக்கப்பட்டன.

× × ×

''பிளவுஸ் பீஸ்''
''பிரா'' உட்பட
எதை வாங்கினாலும்
என் ''செலக்ஸன்''
சரியில்லை என்கிறாய்.
உண்மைதான்
உன்னையும் நான்தானே
'செலக்' பண்ணினேண்.

× × ×

உன் கண்ணீரில் கரைவது
கண் மை மட்டுமல்ல
கனத்த என்
'பர்ஸ்'சும் தான்.

× × ×

நமக்கு
கலியாணம் நடந்ததால்
உனக்கிருந்த

# ஒரு மடல்

'தோசம்' போய்விட்டதாம்.
எனக்கும்தான் போய்விட்டது;
சந்–தோசம்.

× × ×

நான் பேசினேன்
நீ செவிமடுத்தாய்
அது முதலிரவில்;
அது முதல், இரவில்
நீ பேசுகிருய்
நான் செவிமடுக்கின்றேன்.

× × ×

பாதி நாள் – ஒய்யாரமாய்
கொண்டை போடுகிருய்;
மீதிநாள் – ஓயாமல்
சண்டை போடுகிருய்;
ஆத்திரங்களை எல்லாம்
பாத்திரங்களில் காட்டுகிருய்.

× × ×

என் உடைகளை எல்லாம்
பத்திரமாக இல்லாமல்
''பறணை கோட்'' காரனின்
பாத்திரமாக வைத்திருக்கின்ருய்.

× × ×

எந்த வேலையை
எடுத்துச் சொன்னலும்
என்னையே செய்யும்படி
எதிரொலிக்கின்ருய்.
''மகள் கிளிமாதிரி'' என்று
மாமா சொன்னதன்
மர்மம் புரிகிறது.
× × ×
எப்போதும் எரிந்து விழுந்து
எடுத்தெறிந்து ஏசும் நீ

அன்போடு
அத்தான் என்று அழைப்பது
பிளவுஸின் — பின்புற
பொத்தான் பூட்டவே.

× × ×

உன்னைக் காதலிக்கையில்
உயிரைத் தருவதாக
உளறிய தென்னவோ
உண்மைதான்.
அதற்காக — அதை
அடிக்கடி எடுக்கவா வேண்டும்.

— ''வயவையூர் ரட்ணதுரை'' —

---

# பெண்களைப் பற்றி.....

பெண்கள் எப்போதும் ஒருவரையறைவின் இரு துருவங்களிலேயே இருக்கிறார்கள். ஒன்றில் அவர்கள் ஆண்களைவிட மிகவும் நல்லவர்களாக இருக்கிறார்கள். இல்லையேல் அவர்கள் ஆண்களைவிட மிகவும் மோசமாக இருக்கிறார்கள்.

ஒரு பெண் நினைத்தால் ஒருவனைக் கடவுளாக்கவும் முடியும். அவனையே மிருகமாக்கவும் முடியும். ஏனெனில் ஆக்கத்திற்குக் காரணமும் பெண்தான் அழிவுக்குக் காரணமும் பெண்தான்.

ஒரு பெண்ணின் அழகு ஆண்களுக்குச் சோதனையாகவும் பெண்களுக்கு வேதனையாகவும் இருக்கிறது.

கற்புள்ள பெண்களுக்குத்தான் காதல் உணர்ச்சியும், காம உணர்ச்சியும் அதிகமாக இருக்கிறது. ஆனால் சாதாரண ஆண்கள் இவர்களைச் சரிவரப் புரிந்து கொள்வதில்லை

தென்புலோலியூர், க. முருகானந்ததாஸ்

# இல்லறத்தை இனிமையாக்குங்கள் இல்லத்தரசிகளே!

**வி**ட்டுக்கொடுங்கள்; எதையும் விட்டு விடுவார்கள். கோபங் கொண்ட கணவனை கெஞ்சிப்பாருங்கள்; கொஞ்சி மகிழ்வார்கள். புகுந்த வீட்டை புகழ்ந்து பேசுங்கள்; நீங்கள் பிறந்த வீட்டை எண்ணி மகிழ்வார்கள். தலைவன் என்று வந்தவனை வெற்றி கொள்ள எண்ணாதீர்கள். **தோற்றுப் போவதில் இன்பம் காணுங்கள்.** தோற்க வைத்து இன்பம் கண்டீர்களானால் தோற்றது நீங்கள் அல்ல அவர்கள்தான். தற்கால உலகிலே சரிநிகராக வாழ எண்ணும் பெண்கள் தங்கள் கணவன்மாரை துச்சமாக மதிக்கின்றார்கள். பணமும் பொருளும் ஆடம்பரமும்தான் வாழ்க்கை என்று நினைத்து மனைமாட்சியையே பாழடித்து விடுகிறார்கள். பிறந்த வீட்டுப்பணமும் தங்கள் உத்தியோகமும் தங்களை வாழ வைக்கும் என்று எண்ணி விடும் மடமையை எங்கள் மத்தியில் காணக்கூடியதாக இருக்கிறது. கணவனைப்பார்த்து தற்கால மனைவிமார் கேட்கின்றார்கள். இது எனது வீடு, இது எனது பணம், இது எனது நகை இவை எல்லாம் தாய் வீட்டுச்சீதனங்களாம். எல்லாச் செல்வங்களையும் விட மேலான செல்வமாம் குழந்தைச் செல்வங்களை எங்கிருந்து கொண்டு வந்தீர்கள்? இருவரினதும் சொத்துக்களான அவர்களுக்காக தாயானவள் எந்த தியாகத்தையும் செய்ய வேண்டாமா? கணவன் எவ்வளவுதான் கொடியவனாக இருந்தாலும் அவனைத் தன் அன்பால் ஆட்கொள்ள மனைவியால் முடியும். **உண்மையான அன்பு உண்டானால் எந்தக் குடும்பத்திலும் பிரச்சனைகளுக்கு இடமேயிராது.** அன்பு இல்லாத இடத்தில்தான் பிரச்சனைகள் ஏற்படுகிறது. உண்மையில் அன்பின் இலக்கணங்களான பொறுமை, தியாகம், விட்டுக்கொடுக்கும் தன்மை, சுயநலமின்மை, இவை உங்களிடம் இருந்தால் எப்படி பிரச்சனைகள் ஏற்படும்? ஒருவரை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்றால் அவரிடமுள்ள நிறைகளை ஏற்றுக்கொள்வதுபோல் அவரிடமுள்ள குறைகளுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். இனிமையான இல்லறம் இல்லாளின் கைகளில்தான். மனைவியரே உண்மையாகவே உங்கள் குழந்தைகளில் உங்களுக்கு அன்பு உண்டானால் அவர்கள் தந்தையை அன்பு செய்யுங்கள்.

— **ராஜன் மங்களா, நல்லூர்.**

# தாம்பத்தியத்தில் இறையோடும் புதிய ______

மனித வாழ்க்கைச் சரித்திரத்திலே நாலாவது கட்டமாகத் தாம்பத்தியம் விளங்குகின்றது. வாழ்க்கையென்னும் நதியிலே மிதக்கின்ற இரு ஓடங்கள் திருமணத்தின் பின்பு ஒரு ஓடமாக மாறுகின்றது. திருமணம் என்பது இறைவன் இருவரை இணைக்கும் ஓர் அன்புச் சங்கிலி அதைக் குறிப்பிடும் முகமாக இணைக்கின்ருர்கள் கழுத்தில் தங்கச்சங்கிலி.

திருமணத்தின் மூலம் ஓர் ஆணும் பெண்ணும், பெற்ருேர், சகோதர்கள் உறவினர் ஆகியோரில் இருந்து சற்று விலகி புதியதோர் குடும்பத்தை உருவாக்குகின்ருர்கள். வாழ்க்கைப் பொறுப்பைத் தன்னுள் ஏற்று வாழ்க்கைப் பாதையை செம்மைப்படுத்தி, வாழ்க்கைத் துணைவியை, தன் இன்பத்திலும் துன்பத்திலும் கை கோர்த்துச் செல்லும் மனத்தைரியத்தையும் பெற்று புதிய வாழ்க்கையை அமைக்கின்ருர்கள்.

**அன்பு:-** திருமணத்திலே உண்மை அன்பைக் காணுகின்ருேம். அங்கே கணவன் மனைவிக்கிடையே ஐக்கியம். ''ஆம்'' என்ற சொல்லினுல் ஒருவரை ஒருவர் மனமார ஏற்கின்ருர்கள். ஒரு கொடியில் மலர்ந்த இரு மலர்களாக மலருகின்ருர்கள். திருமணத்தின் போது இரு உள்ளங்களும் தங்கள் வாழ்க்கை அனுபவங்களையும் மறக்க முடியாத சம்பவங்களையும், தங்கள் குண இயல்புகளையும், தங்கள் குறை, நிறைகளையும் பகிர்ந்து கொள்கின்ருர்கள். ஏன் இவையனைத்தும்? வெறுப்பையுண்டாக்கவா இல்லவேயில்லை. ஒருவர் ஒருவருடைய குறை நிறைகளை ஏற்று தங்கள் வாழ்வை வளம் படுத்துவதற்காகவே. அங்கே உண்மையான பகிர்வு, உள்ளத்தைத் திறந்து பேசுகின்ருர்கள். அதாவது அன்பைப் பகிர்ந்து கொள்கின்ருர்கள் என்றே கூறவேண்டும். அவ்வன்பில் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்கின்ருர்கள். கணவன் மனைவி மீது காட்டும் அக்கறை, மனைவி கணவன் மீது காட்டும் அக்கறை, இவை அவர்களின் தெய்வீக அன்பை பிரதிபலிக்கின்றன.

**பொறுப்பு:-** புதிய தம்பதிகள் தங்கள் வாழ்க்கையில் பல பொறுப்புகளை ஏற்க வேண்டியவர்களாக இருக்கின்ருர்கள். ஒரு சமுதாயத்திலே தாயாய், தந்தையாய் விளங்குகின்றவர்கள் திருமணத்துடன் அல்லது ஒரு பிள்ளையைப் பெற்றவுடன் தங்கள் கடமைகள் முடிந்து விட்டது என்று

எண்ணக் கூடாது. மனைவியைப் பராமரிக்கவும் இன்னல்கள் துன்பம் வருகின்ற வேளையிலே அதை மேற் கொள்ளவும் வேண்டும். பிள்ளையை பெற்றுவிட்டால் போதாது அப்பிள்ளையை சமூகத்திலே வாழக்கூடியவனாக, உகந்தவனாக ஆக்குவதே பெற்றோரின் பொறுப்பு. இன்றைய சிறுவர்கள் தான் நாளைய சமூகத்திலே பெரியவர்கள். நாளைய சமுதாயத்திலே இவர்கள் தீயவர்களாக வாழ்வதா பெற்றோர் விருப்பம்? ஆகவே பிள்ளையின் வளர்ப்பு பெற்றோரில்தான் தங்கியிருக்கின்றது. எனவே இவ்வாறான பல பொறுப்புக்களை நாம் கொண்டுள்ளோம் என்பதை இரு உள்ளங்களும் ஏற்க வேண்டும். ஏற்றுச் செயற்பட வேண்டும்.

**இன்னல்கள்:-** மனித வாழ்க்கையில் இன்னல்கள் சாதாரண ஒன்றாகும். கணவன் மனைவியை தக்க முறையிலே கவனித்து பிள்ளையும் நன்நெறிப்படுத்துவது அவன் வாழ்வில் பெரும் சுமையாக இருக்கின்றது. இதனால் தான் அவன் நெற்றி வியர்வை சிந்த உழைக்கின்றான். பொறுப்புக்களை கடமைகளை உணரும் பொழுது அங்கே பல இன்னல்கள் அவள் வாழ்க்கையில் இழையோடுவதை உணருகின்றான் ஒரு கணவனும் மனைவியும் தங்கள் பிரச்சனைகளில் மாத்திரம் நின்றுவிடாது மற்றவர்களின் துன்பங்களிலும் ஆறுதல் வழங்குபவர்களாக மாறுகின்றார்கள். இத்தனை விதமான துன்பங்களையும் ஏற்று அதை வாழ்வின் சவாலாகக் கொண்டு வாழ்வதற்கு மனத்திடம் வேண்டும். அதையும் அவர்கள் திருமணத்தின் இணைப்பிலேயும், ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவதிலேயும் பெறுகின்றார்கள்.

**புரியாத் தன்மைகள்:** திருமண வாழ்க்கையில் மணமுறிவுகள் ஏற்படுவதைக் காண்கின்றோம். இரு உள்ளங்கள் ஒன்றாக இணைந்து அன்பில் திளைக்க வேண்டிய நேரத்தில் இருவருக்குமிடையிலே மனவெறுப்புக்கள் கசப்புக்கள் ஏற்படுகின்றன. இவையும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாத் தன்மையால் ஏற்படுகின்றன. நாட்டிலும் சமூகத்திலும் குடும்பத்திலும் பல பிரச்சனைகள் எழுவதற்கு காரணம் என்ன? புரியாத்தன்மை புரிந்து கொள்ளும் மனப்பான்மை தம்பதிகளிடையேயும் இல்லாததினால் தான் அன்புத்திருமணம், முறிவுத்திருமணமாக காட்சி கொடுக்கின்றது. சமுதாயத்தை சீர்கேடாக்குகின்றது. ஆகவே சமுதாயம் எதிர்பார்க்கும் நல்ல குடும்பங்களாக தம்பதிகள் வாழ வேண்டும். அதற்கு நல்லுள்ளம் வேண்டும். திறந்த உள்ளம் வேண்டும், புரிந்து கொள்ளும் மனப்பான்மை வேண்டும். அப்போது நல்லதோர் சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதுடன் வாழ்வில் மகிழ்ச்சியும், சமாதானமும் காணமுடியும்.

**ஞா. பீற்றர்**
தாளையடி.

சிறுகதை

# கலைந்துபோன ராகம்

— ஷாந்தி கஜேந்திரா
உரும்பராய்.

முன் நெற்றியில் சுருண்டு விளையாடிய தலைமயிரை காற்று தனக்கேற்ப அசைத்தாட மடித்த முழந்தாள்களுக்குள் முகத்தின் நாடியைப் புதைத்து கைகளால் கால்களை சுற்றி அணைத்தபடி உட்கார்ந்திருந்தாள் ரேணுகா. தலைமயிரின் சிறு சிறு விலகலில் அவளின் முகம் பார்க்கக் கூடியதாக இருந்தது. காய்ந்துவரண்ட முகத்தில் கண்களில் இருந்து வடிந்த கண்ணீர்ப் பூக்களின் கோடுகள் கோலம் போட்டிருந்தன. அழுதழுது உலர்ந்துபோன கண்கள் முயற்சி செய்து வழிய விட்ட கண்ணீர்த் துளி கன்னத்தைச்சுட்டு உஷ்ணமாய் உதிர்ந்து கொண்டிருந்தது.

அவளின் மனதுள் புதைந்திருக்கும் துயரங்களையும், துன்பங்களையும் அவளினாலேயே தாள முடியவில்லை. நடந்தவைகளை நினைக்க நினைக்க அவள் மனம் ஆழமான புண்போல் வேதனை கொடுத்தது.

சிறு வயதில் இன்பமாக வாழ்ந்தவள். பருவ வயதில் காதல் வலையில் சிக்கினாள். ரேணுகா நல்ல அழகி. இளமையின் பூரிப்பு அவளில் வாரி வீசப்பட்டிருந்தது ரேணுகாவின் அழகில் மயங்கிய பிறேம் அவளை உயிருக்குயிராய் நேசித்தான். இருவர் மனதிலும் காதல் இருதலைப் பட்சமாக ஆழமாக வேரூன்றி வளர்ந்தது.

ரேணுகா அவள் குடும்பத்தில் மூன்றாவது புதல்வி, இரண்டு அக்காமாரும், ஒரு தம்பியும் தங்கையும்; சிறு வயதிலேயே தந்தையை இழந்தவள், அவள் சிறு பிள்ளையாக இருக்கும்போது குடும்பமே மிக கஷ்டப்பட்டது. சாப்பாட்டிற்கே பெரிய திண்டாட்டம். தாயின் கூலி உழைப்பில் அத்தனை பேரையும் வளர்க்க முடியுமா? தன் வயிற்றிற்குத் துரோகம் செய்து தம்பி தங்கைகளைப் பார்த்த மூத்தவள் பசியினாலேயே உயிரை இழந்தாள்.

பிறேம் ரேணுகாவின் காதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருந்தது. ரேணுகா பிறேமில் தன் உயிரையே வைத்திருந்தாள். அவன் இல்லாதுவிட்டால் தான் இல்லை என்ற அளவிற்கு அன்பு வைத்திருந்தாள். இவர்களின் காதல் இரு வீடுகளுக்கும்

எட்டியது. இடி இடித்து பலமான மழை பெய்து முடிந்தாற் போல் கலகலப்பு ஏற்பட்டு ஒரு தீர்வு ஏற்பட்டிருந்தது. இதன் நிமித்தம் பிறேம் — ரேணுகாவின் திருமணம் இனிது நிறைவேறியது. இவர்களின் திருமணத்தை ரேணுகாவின் அக்காவே முன்னின்று முடித்து வைத்தாள். சீதனம் எதுவும் வாங்காத பிறேம் தன் வீட்டிலேயே ரேணுகாவுடன் இனிது வாழ்ந்து வந்தான். அவள் தன் உடல், பொருள், ஆவி அத்தனையையும் அவனுக்கு அர்ப்பணித்து ஈருடல், ஓருயிர் என வாழ்ந்தாள். இந்த அன்பு எப்போதும் நிலைக்கவேண்டும் என்றே கடவுளிடம் வேண்டுவாள்.

வருடங்கள் இரண்டு உருண்டோடின. சிறுகச் சிறுகச் சேர்ந்த பணங்களை சேமித்து முதலிட்டு ஒரு தொழில் ஸ்தாபனத்தைத் தொடங்கி நிறைய உழைத்து முன்னுக்கு வந்தான் பிறேம். அவனின் கையில் பணம் சிரித்தது. பணம் சேரச்சேர அவன் மனதில் ஆசைவளர்ந்தது. ஆசையின் நிமித்தம் அவன் போக்கே மாறியது. வாழ்வு எல்லாம் பணத்திற்காகவே என ஆசையில் புரண்டது அவன் மனம். ரேணுகாவைக்கூட அலட்சியமாக நடத்தத் தொடங்கினான். இந்த சோதனைகளை அவளால் தாங்க முடியவில்லை. பணத்தை விட அன்பு தான் பெரிது என அவள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவன் அதை கேட்கவில்லை. தன் பணமே பெரிது என நியாயப்படுத்தினான். ஆனால் அவளோ ''ஆசைகள் வேறு, நியாயங்கள் வேறு. ஆனால் நியாயங்கள் கொண்டு செலுத்தும் வழிகளில் ஆசை இருந்தால் தான் ஆசைகள் கௌரவிக்கப்படும்'' என எடுத்துச் சொன்னாள். ஆனால் அவனோ ''எனக்குப் புத்தி சொல்ல நீ யார்? என்னட்டை வரேக்கை, பொன் பொருள் சீதனத்தோடை பெருமையாவே வந்தனி'' என ஏசி அடிக்கவும் தொடங்கினான்.

தினமும் வந்து தனக்கு வரவேண்டிய சீதனக் காசை வாங்கி வரும்படி அடித்து உதைத்து துரத்தினான், அவள் யாரிடம் போய் சீதனம் வாங்குவாள்.

பணத்துக்காக மனிதனா? அன்புக்காக மனிதனா? பணத்தைப் படைத்த மனிதன் தானே அதற்கு அடிமையாவதா? இந்த உண்மைகள் அவள் மனதில் ஏன் ஏழையாகி விட்டது. ம்...... அது சரி, ஆதரவு அற்றது எல்லாம் ஏழை தான். அந்த விதத்தில் உண்மைகளும் ஏழையாய் இருப்பதில் தவறில்லைத் தானே'' என சிந்தித்து, சிந்தித்து எல்லாமே சூன்யமாகிவிட்டது.

மனிதனாகப் பிறந்தால் பிரச்சிகள் எல்லோருக்கும் இருக்கும் தான். ஒளி கொடுக்கும் விளக்கிற்குக் கூட நிழல் இருக்குத் தானே. எல்லாம் சிறு சோதனைகள் தான் என்று இருந்த அவளுக்கு தன் கணவனின் போக்கு

கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. ஆயினும் அவன்மேல் கொண்ட அன்பு அந்த வெறுப்பைச் சமப் படுத்திக் கொண்டிருந்தது.

இன்றும் அப்படித்தான் அவளை ஏசி அடித்து "வரும்போது சீத னக் காசோடு இருக்கவேணும்" என்று சத்தம் போட்டுவிட்டு முன் போய்விட்டான்?

வழி தெரியாத ரேணு ஓரிடத் திலேயே நின்று தன் துயரம் ஓரளவு ஓய்வுபெறும்வரை அழுத படியே இருக்கிறாள். பொழுது சாய்ந்து இருளத் தொடங்கியது. காலடி அரவம்கேட்டு திரும்பிய போது அங்கு தன் கணவன் நிற் பதைக் கண்ட ரேணுகா மெல்ல எழுந்து தலையைக் குனிந்தபடி நின்றாள். "என்ன வீட்டை போனனீயா?" என உறுமினான். கலங்கிய கண்களூடாக பார்த்த அவளுக்கு அவன் உருவம் கலங் கலாகத் தெரிந்தது. கண்ணீரைத் துடைத்தபடி அவன் அருகில் சென்ற அவள் "இதோ பாருங்க; நீங்க இப்ப சீதனம் கேட்டா; நான் என்ன செய்ய, " நாங்க ஏழைங்க தெரிந்தும் தானே தியாகிபோல் கலியாணம் கட்டின னீங்கள். கல்யாணத்துக்கு முன் னுடி இதைச் சொல்லியிருந்தா நானுகவே விலகியிருப்பேனே; இந்த ரண்டு வருச காலம் அன் பும் பாசமும் இருந்த உங்களுக்கு என்னங்க நடந்தது? என்னை விடப் பணம் பெரிசாத் தெரி யுதா? என அழுதழுது விக்கலுக் கிடையே கூறினாள். அவன் எதையும் காதில் வாங்காமல் பிடிவாதமாக நின்றான். இவர்கள் வாக்குவாதம் மணிக் கணக்கில் நீடித்தது. தன் முயற்சி பலிக் காது போகவே இறுதியில் அவள் கால்களைக் கட்டி அணைத்தபடி "எனக்கு துரோகம் செய்யா தீங்க" என்று புலம்பினாள். "எனக்கு மறு பேச்சுத் தேவை யில்லை, இப்பவே போ, கெதி யிலை போய் சீதனத் தோடை வா" என்னை உனக்கு வேணு மெண்டா, சீதனத் தோடை வா" என்று பொரிந்து தள்ளி னான் அவள் போகாமல் கால் களை இறுக பிடித்தபடி பலமாக கத்தி அழுதாள். அவனே அவளை இழுத்து தள்ளி வீட்டுக்கு வெளி யில் விட்டிட்டு கதவைச் சாத்தி தாழிட்டான். மூடிய கதவின் மேல் தலையினாலும், கைகளினாலும் மாறிமாறி அடித்து கதறினாள். அவனே திறக்கவில்லை. ரேணுகா வின் கதறலும், கதவின் மேல் தலையினாலும் கைகளினாலும்மாறி மாறி மோதிய சத்தமும் கலந்து அந்த இரவு முழுவதும் பயங்கர மாகக் கேட்டுக்கொண்டிருந்தது. இதை எல்லாம் சட்டை செய்யா மல் உறங்கிக் கொண்டிருந்தான் பிறேம். காலை புலர்ந்தது. கண் விழித்த பிறேம் "ம் ..... ராத்திரி பூசையோடை ஆள் எப்பிடியும் சீதனத்தோடை தான் வருவா" என தனக்குச் சொல்லியவனாக சிகரெட்டை எடுத்து பற்ற வைத்து புகை வளையங்களை ஊதி விட்டபடி எழுந்து நடந்து வாசல் கதவைத் திறந்தான். திறந்த வன் வாய் பிளக்க விக்கித்து நின்றான்.

கதவின் வாசலோடு குப்புறப் படுத்திருந்தாள் ரேணுகா. படிக் கட்டு முழுதும் ஒரே இரத்த வெள்ளமாக இருந்தது. கதவின் முன் பக்கம் இரத்த நிறமாக காட்சியளித்தது. ரேணுகாவின் தலைமோதியதால் உடைந்து இரத் தம் பெருகிக் கொண்டிருந்தது. உள்ளங் கைகள் சிவந்து கன்றி கசங்கிய ரோஜா மலரைப்போல் பரிதாபகரமாக சோர்ந்து இருந் தது. குப்புறப்படுத்திருந்த அவ ரின் வலது கைமுன்னுக்கு நீண்டு அப்படியே இருந்தது. அதில் அவள் தன் விரல்களினுல் இரத் தத்தைத் தொட்டு எழுதியிருந்த வாசகங்கள் பளிச்சென தெரிந் தது. அதில்

''அத்தான் என் உயிரே!

உங்கள் அன்பு ஒன்றிற்காகவே வாழ்ந்த என்னைப் புரிந்துகொள் ளாமல் சீதனம் கொண்டு வரும் படி கூறினீர்கள். சீதனம் தர என்னிடம் ஒன்றுமே இல்லை அத் தான். அதனுல் என் உயிரையே உங்களுக்குச் சீதனமாகத் தருகி றேன். என் ஆத்மா என்றும் உங் கள் நல்வாழ்வுக்காகவே பாடு படும் என்னை மன்னிக்கவும்.

இப்படிக்கு
அன்பு மனைவி
ரே......

வாசகத்தின் முடிவு வருமுன் னரே அவள் வாழ்வின் முடிவிற்கு சென்று விட்டாள். அவளிடமி ருந்து வெளியேறிய இரத்தத்து டன் அவள் உயிரும் வெளியேறி விட்டது. உயிரற்ற ரேணுகாவின் உடலை மடியில் போட்டு பணத்தை விட குடும்பத்தில் அன் புதான் முதன்மை என்று காலம் கடந்து உணர்ந்த பிறேம் அவ ளைக் கட்டி அணைத்து பைத்தியக் காரன் போல் கதறினுன். அவ னின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர்த்துளிகள் ரேணுகாவின் முகத்தில் விழுந்து விழுந்து முகத்தை ஈரமாக்கிக் கொண்டி ருந்தது.

[யாவும் கற்பனை]

## எழுத்தாள அன்பர்களின் கவனத்திற்கு

ஆக்கங்களை அனுப்புவோர் எமது காரியாலய தேவைகட்காகத் தமது பெயர், முழு முகவரி ஆகியவற்றை ஆக்கத்தின் கீழ்க் குறிப்பிடுதல் வேண்டும்.

புனை பெயரில் ஆக்கம் பிரசுரமாக வேணடுமென விரும்புபவர்களும் மேற்குறிப் பிட்டவாறு பெயர், முகவரி ஆகியவற்றைக் குறிப்பிடுதல் அவசியம்.

பிரசுரிக்கப்படாத ஆக்கங்களைத் திரும்பப் பெற விரும்புவோர் உரிய அஞ்சல் தலைகளை இணைப்பது அவசியம்

ஒவ்வொரு ஆக்கமும் தனித்தனியாக எழுதப்படல் வேண்டும் பல ஆக்கங்கள் ஒரு உறையினுள் அனுப்பப்படலாம். ஆனுல் ஒவ்வொன்றின் கீழும் மேற்குறிப் பிட்டவாறு பெயர், முகவரி குறிப்பிடப்படல் வேணடும்.

# தாம்பத்தியம் ஓர் நல் வீணை

கால சுற்றோட்ட இயற்கை நிலைதனில்
பூவாகி காயாகி கனியாகும் வழிதனில்
தான் என வாழ்ந்திட்ட காலம் மடிந்து
தாம் என வாழ்ந்திட வேண்டிய தாம்பத்தியம் மலர்கின்றது.

இனிய கீதம் தந்திடும் வீணை என்றிடுவர்
உடல்கள் இரண்டு உயிர் ஒன்றே எனக் கூறிடுவர்
இரு மாடுகள் பூட்டிய வண்டி என விழித்திடுவர்
நெஞ்சங்களின் ஒன்றிய இணைப்பு எனப் பாடிடுவர்.

ஆதாம் ஏவாள் ஆரம்பித்திட்டனர் ஓர் தாம்பத்தியம்
கோவலன், கண்ணகியும், இராமனும் சீதையும்
இன்னும் பல வரலாற்று தாம்பத்தியம்
வள்ளுவன், வாசுகியும், காந்தி கஸ்தூரி பாயும்
வழிகாட்டி நின்றிடும் வாழ்வுத் தாம்பத்தியம்.

அந்தோ பரிதாபம் தாம்பத்தியமே
இன்று உன் நிலையென்ன
கூறிடுவேன் என் கண்கள் கண்ட காட்சிகளை
பறை சாற்றிடுவேன் என் செவி கேட்ட செய்திகளை

கட்டியவளைக் கடைசி வரைக் காத்திடுவேன் — என
கெட்டி மேளம் முழங்க கரம் பிடித்தவன்
வீட்டில் துன்ப அலைகள் மோதிடும் போது
சனியனே என கரம்பிடித்தவளைச்
சாடிடும் தாம்பத்தியம் ஒன்று.

கண்ணே, மணியே, மானே, தேனே
பொன்னே மண்ணே வேண்டாம் அஞ்சுகமே.
பெண்ணே நீயே பெரும் சீதனம் என்றவன்,
பின்னே சீதனம் கேட்டு பெண்ணவளை
வதைத்திடும் தாம்பத்தியம் ஒன்று

கட்டியவள் கண் கலங்கிட வாசலில்தான் நின்றிருக்க
வெட்டிய மரங்களாக மழலைகள் பசிதனில் சாய்ந்திருக்க
கிட்டிய சம்பள மத்தனையும் கொட்டி குடித்துவிட்டு
வட்டியும் குட்டியுமாக நிதம் மனைவி மக்களை
உதைத்திடும் தாம்பத்தியம் ஒன்று.

பழையன களைந்து புதியன பெற்றிடுவோம்
குறைகளைத் தவிர்த்து நிறைவுதனைப் பெற்றிடுவோம்
தாம்பத்திய முறிவுகளை துணிவுடனே புனர்வுசெய்து
தணியாத இன்பத்தினை மகிழ்வுடனே முகர்ந்திடுவோம்.

**கமலா இளங்கோவன்**
குருநகர்,
யாழ்ப்பாணம்.

---

★ திருமணம் என்பது கதவு தாளிடப்பட்ட ஒரு கோட்டை, அதற்கு வெளியே இருப்பவர்கள் உள்ளே புக முயல்கின்றார்கள். உள்ளே இருப்பவர் வெளியே வர விரும்புகிறார்கள்,

★ ஒரு ஆத்மாவிடம் இல்லாத குறைவை மற்றொரு ஆத்மா இட்டு நிரப்புவது இல்லறம். அன்பு அடக்கம் தயாளம் கருணை ஆகியவற்றை ஏற்படுத்துவதே திரும ணத்தின் எண்ணம். இந்த எண்ணம் பரிசுத்தமானது தெய்வீகமானது.

★ அன்பு தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் திரு மணம் செய்து கொள்ளாதே! ஆனால் அன்பு என்றால் என்ன என்பதை முதன்மையாக விளங்கிக் கொள்.

★ பொன்னுக்கும் — மண்ணுக்கும் , புகழுக்கும் ஆசைப் பட்டு அன்பில்லாத ஆண்களும் மகளிரும் மணம் புரிந்து கொள்வார்களேயானால், அவர்கள் தமது வாழ்க்கை யைப் பாழாக்க முடிவு செய்து விட்டார்கள்.

— செல்வி அ. செபராணி —
புங்குடுதீவு.

# ஆயிரங்காலத்துப் பயிர்

சி. சாந்தலட்சுமி — தையிட்டி

ஆயிரங் காலத்துப் பயிரென கூறப்படும் மணவாழ்வை மணம் முடிக்க விரும்புவர்களும் முடித்து வைக்க இருப்போரும் நன்கு கலந்து ஆலோசித்து செயற்பட வேண்டும். கடமைக்காகவோ அல்லது எல்லோரும் மணமுடிக்கின்றார்கள் என்பதற்காகவோ வாழ நினைக்கக் கூடாது. வாழ்க்கை வாழத்தகுந்தது என்றாலும் அதனை உரிய முறையில் ஆரம்பிக்க வேண்டும்.

திருமணத்தில் உள்ள பொறுப்புக்களை இளைஞனும் இளம்பெண்ணும் ஏற்பதன் முன் அவர்கள் மணவாழ்க்கைக்கு உரிய கடமைகளையும் சுமைகளையும் தாங்கத் தக்கதாக நடைமுறை வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும். பாலிய திருமணத்திற்கு இடமளிக்கக்கூடாது. முக்கிய உறவை ஏற்படுத்தும் திருமணத்தை — சிறந்த விளைவுகளை விளைவிக்கும் அதனை — மிகவிரைவாக நடத்திடல் கூடாது. போதிய ஆயத்தமின்றியும் மன — உடல் ஆற்றல்களை நன்கு வளர்ப்பதற்கு முன்பும் நடத்திடல் தகாது. **உடல், உளப்பொருத்தங்கள்** கவனிக்கப்படவேண்டும். தம்பதிகள் பெற்றோராகியதும் பாரிய பொறுப்பு தம்மிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதென்பதை அவர்கள் உணரவேண்டும். குழந்தைகள் அனுபவிக்க உடல் சம்பந்தமான நல்லொழுக்க சம்பந்தமான தன்மைகள் யாவும் பெருமளவிற்கு பெற்றோரது பண்புகளையே பிரதிபலிக்கின்றன. இல்லத்தின் பண்பைக்கொண்டு சமுதாயத்தின் நிலையை நிர்ணயிக்கலாம்.

தம்பதியர்க்கு உலகியலுக்குரிய செல்வம் இல்லாவிட்டாலும் சிறந்த ஆசீர்வாதமான உடல் நலத்தைப் பெற்றிருக்க வேண்டும். வயதில் பெரும் வித்தியாசம் இருத்தலாகாது. **வயது வித்தியாசம்** அதிகமாக இருக்குமாயின் தம்பதியருள் வயதில் இளையவரின் நலம் பெருமளவிற்கு பாதிக்கக்கூடும். இவர்களிடையே பாலியல் பிரச்சனைகள் தோன்றி இருவரையும் பாதிக்கும். பெறும் குழந்தைச் செல்வங்களுக்கும் உடல், மன ஆற்றல்களில் குறைகள் உண்டாகும்.

மணம் முடிக்க விரும்பும் நங்கை நல்லார்வமும் நேர்மையும் உள்ளவனை இறையன்பும் இறையச்சமும் பொருந்தியவனை தன் துணைவனாகக் கொள்ள வேண்டும். அதேபோல் வாழ்க்கையின் துன்பங்களிலும் பங்கு கொள்

ளும் திறம் பெற்று ஒருவனோடு அவன் அருகில் துணையாய் இருக்கும் ஒருத்தியை கணவன் மேன்மையடையவும் திருந்தவும் செய்யவல்ல திடமுள்ள அவளது அன்பால் அவனுக்கு மகிழ்ச்சி ஊட்டுபவளை இளைஞன் தன் துணைவியாக்க வேண்டும். குறை நிறைகளுடன் வாழ்வதுதான் வாழ்க்கை. பிரச்சனைகளுக்கு ஒதுங்கி ஒளித்து வாழ்வது வாழ்க்கை அல்ல. எல்லாவற்றையும் சமாளித்து நடக்கக்கூடிய திறமை பிரச்சனைகளை நேரிய முறையில் எதிர் கொள்வதன் மூலம் கிடைக்கும்.

விளங்கப்படாதவரை விசித்திரமாக படுபவை விளங்கித் தெரிந்து கொண்டால் வேதனைத் தீயாகச் சுடுவதும் உண்டு. ஆராச்சிக்குட்படாதவரை எவற்றின் அந்தஸ்தும் உயர்ந்திருப்பது உண்மைதானே. எனவே எவற்றிலும் எல்லாரிலும் குறைகளைக் கண்டு விபரீதங்கள் வளர்க்காமல் நிறைவுகளைக் கண்டு மனத்திருப்தியடைவது எல்லோருக்கும் நன்மை பயக்கும். இவ்வுலகில் திருப்தி ஒரு சிறந்த செல்வமாக கருதப்படுவது இதனால்தான். துன்பம் நெஞ்சை தழுவும் நேரங்களில் தேர்ந்தெடுக்கும் சரியான வழியைச் சார்ந்தே அவர்களது வருங்கால வாழ்க்கையில் மகிழ்ச்சியும் பயனும் ஏற்படும்.

**தாளம் தவறிப் போகும்போது நல்ல ராகம் வந்து சேர்வதில்லை.** பிரச்சனைகள் இறுகிக்கடினமடைய முன்னதாகவே இருவரும் சிநேகிதர்களைப் போல மனம் விட்டுப்பேசி சுமைகளைக்குறைக்க முயற்சி எடுக்கவேண்டும். மூடி மறைப்பது மனதிற்குள் வெதும்புவது முழுக்குடும்பத்தையுமே பாதிக்கத் தொடங்கிவிடும். பாலியல் சம்பந்தமான பிரச்சனைகள் இருப்பின் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடி வெகு அவதானமாகத்தீர்த்துக் கொள்ள முற்பட வேண்டும். தம்பதியர் சிநேகிதர்களாகப் பேசி மகிழ்வதில் எவ்வித சிரமங்களும் இருக்கப் போவதில்லை. தோளோடு தோள் சேரும்போதுதான் இல்வாழ்வு சிறந்த பல்கலைக்கழகமாக மாறுகின்றது. அன்பினால் தளைக்கப்பட்ட இதயங்கள் அதுவரை அறிந்திராத சிறப்பியல்புகளைப் கண்டுணரும். **காதலைக் கண்டவரும் கடவுளைக் காணலாம்** என நாமக்கல் கவிஞர் காதலின் புனிதத்தன்மையை அழகாகக் கூறியுள்ளார். தூய அன்பு இழிவானதை விடுத்துச் சிறப்பியல்புகளையே நாடுகின்றது. அன்பு தன்னை வெளிப்படுத்தாமல் நீண்டகாலம் நிலைத்திராது. உன்னோடு தொடர்பு கொண்ட இதயம் இரக்கமின்றி பசித்திருக்க விடுதல் கூடாது.

**பிறர் மகிழ்வுடன் வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கவல்ல சக்தி நம்மிடத்தில் இருக்கின்றது.** இதனை உணர்ந்து செயலாற்றினால் ஒவ்வொரு இல்லத்திலும் ஒவ்வொரு தம்பதிகளும் மகிழ்ச்சியுடன் வாழலாம். அவர்களது பரம்பரைகளும் சமுதாயத்தில் ஆயிரங்காலத்துப் பயிரென வளமுடன் திகழும்.



# கருத்துக் குவியல் 33

## காதல் திருமணமும் சீதன ஒழிப்பும்

### காதல் வளரட்டும்! சீதனம் ஒழியட்டும்!

சீதனப் பிரச்சனைக்கு தீர்வு காதல் திருமணமேயாகும். காதலால் பணம் பொருள் எதையும் எதிர்பாராது வாழ்க்கை நிறைவாகுகிறது. வாழ்க்கை என்பது வளரும் பிறையாகவும் இருக்கலாம். வாடும் மலராகவும் இருக்கலாம். எனவே, தெய்வீகமான காதல் அடிப்படையில் ஒருவரை ஒருவர் உள்ளத்தை புரிந்து ஒன்று சேர்ந்து விட்டால் சீதனம் என்ற பேச்சிற்கே இடமின்றி வாழ்வில் அவர்கள் இன்பத்தைக் காணமுடிகின்றது.

சீதனப்பிரச்சனை தலை தூக்காது தீர்த்து வைப்பது இன்றைய இளைய தலைமுறையிலே தங்கியிருக்கிறது. பொழுது போக்கிற்காக அன்றி புனிதமான காதலை உணர்ந்து உள்ளத்திற்கு மதிப்பளிக்கும் மானிடரும் இல்லாமல் அல்ல. அவர்களால் எத்தனையோ ஏழைப் பெண்களின் வாழ்வும் மலர்ந்திருக்கிறது. கஷ்டத்திலும் சந்தோஷத்தை அனுபவிக்க முடிகிறது. செல்வம் மட்டும் இருந்தால் வாழ்கை அமைந்து விடாது. செறிந்த மனப்பங்கே வாழ்க்கையை அமைக்கிறது. எனவே காதலை வரவேற்று சீதனப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.

யே. அ. மலர்,
மணிப்புரி, கொழும்புத்துறை

● ● ●

### சிந்தனைப் போக்கு மாற வேண்டும்.

சீதனத்தை ஒழித்திடுவோம் என சில இளைஞர்கள் குரலெழுப்பி நின்றபோதிலும், கொடுக்கமாட்டோம் சீதனம் என மகளிர் கிளர்ந்தெழுந்தபோதிலும் காதல் திருமணங்கள் பல நடைபெறுகின்றபோதிலும் நாம் காண்பது என்ன? சீதனம் கொடுக்க வகையற்று வாழ்க்

கையில் ஏமாற்றங்களுடன் ஏக்கங்களுடன் தவிக்கும் மங்கையர்கள் ஒருபுறம் திருமணம் முடிந்த பின்னரும் சீதனம் கேட்டு துன்புறுத் தப்படுகிறவர்களும், அவ்வேதனை தாங்காது தம் உயிரை அழித்துக் கொள்ளுகின்ற பெண்களையுமே நாம் காண்கின்றோம். இதுவே இன் றைய உண்மை நிலை.

திருமணம் செய்பவர்கள் தம் குடும்ப வாழ்வை சிரமமின்றி நடாத்திச் செல்வதற்கு பெற்றோர் செய்யும் உதவி சீதனமாக கரு தப்பட்டது. அன்று சீதனமாக மணமானவர்கள் தனிக்குடித்தனம் நடாத்துவதற்கு தேவையான பாத்திரங்கள் மற்றும் வீட்டுப் பொருட் களே கொடுக்கப்பட்டது. பணம் அன்று முக்கியத்துவமாக கருதப் படவில்லை ஆனால் காலப்போக்கில் இந்நிலைமாறி இன்று தொழிற் தரத்திற்கேற்ப விலைகூறி பணமாக இவ்வளவு வேண்டும் எனக் கேட்டு நிற்கும் ஆண் வீட்டுப் பெற்றோர்களையும் அதற்கு தலையசைத்து நிற் கும் இளைஞர்களையும், ஓர் பெண் வீட்டார் கேட்ட தொகையை கொடுக்கத்தயங்கியதும் நாம் தருகின்றோம் என மற்றொரு பெண் வீட்டார் போட்டி போட்டு நிற்கும் நிலையையும் உருவாக்கி விட் டது.

காதல் திருமணம் சிறந்ததுதான் என்பதனை நான் வரவேற்கின் றேன். ஆனால் காதல் திருமணம் சீதனப்பிரச்சினையைத் தீர்க்க உத வுமா என்பதனை சிந்திக்க முற்படும்போது அது சரியான வழியாக அமையாது என்பதனை நாம் உணரலாம், பெற்றோர்கள் தீர்மானிக் கும் திருமணங்கள் சீதனப் பிரச்சனையால் சில வேளைகளில் நடை பெறாது போகலாம். திருமணம்தான் தடைப்படலாம். அப் பெண் ணின் வாழ்வல்ல. ஆனால் காதலித்த பின் சீதனம் இன்றேல் மணம் முடிக்க மாட்டேன் என மறுக்கும்போது சம்பந்தப்பட்ட பெண்ணின் வாழ்வே பாதிப்படையலாம். திருமணத்தின் முன் ஒருவரை ஒ்ருவர் புரிந்து கொண்டு வாழ்வதற்கு காதல் உதவலாமே தவிர அதன் நோக்கம் சீதனப்பிரச்சனையை ஒளிப்பதற்கன்று.

அப்படியானால் சீதனப்பிரச்சனையை தீர்க்கவே முடியாதா? பெண் ணினத்தின் கண்ணீர் காவியம் முடிவு பெறாதா? சீதனம் வாங்குதல் தீமையானது என அனைவரும் ஏற்றுக் கொண்ட போதிலும் தம் சொந்த வாழ்க்கையில் அதனை எதிர்த்து செயற்பட தயங்குகினறனர். நியாயமற்றது எனத் தெரிந்து கொண்ட பின்னரும் சீதனம் கேட்டு நிற்கும் இளைஞனின் பெற்றோர்கள், தவறானது எனப் புரிந்து கொண்ட பின்பும் சீதனத்தை ஆமோதித்து நிற்கும் இளைஞர், எப்படியும் தன் மகள் வாழ்ந்து விட வேண்டுமெனப் போட்டி போட்டுச் சீதனம் கொடுக்கக் காத்திருக்கும் பெண்ணின் பெற்றோர்கள், எவ்விதத் திலும் நான் வாழ்ந்திடவேண்டுமென்று அதனை ஏற்றுக் கொள்ளும்

மங்கையர்கள், பிழையான ஒன்றை ஊக்கப்படுத்தி நிற்கும் சமுதாயம் அனைவரும் சிந்திக்க வேண்டும். தெளிவாக கூறின் மக்களின் தவருன சிந்தனைப் போக்குகளை மாற்றியமைப்பதன் மூலம் இப் பிரச்சனைக்கு தீர்வு காணலாம்.

இ. கிறிஸ்தோப்பர்
எட்டியாந்தோட்டை

● ● ●

## சீதனம் சிதையட்டும்!

பரந்துள்ள ஒரு விடயத்தை சாதாரண சிறு வட்டத்திற்குள் அடக்கி விடமுடியாது. சீதனம் என்பது பல வருடகாலங்களிற்கு முந்தியது. மனித நாகரீகத்தோடு பிணைத்து இன்று விஸ்வரூபம் பெற்றுள்ளமை வெளிப்படை. இப்பொது தான் இதனுலான கொடுமை புலப்படுகிறது. இதை ஒழிக்க வென்றே பத்திரிகையாளரும் கதாசிரியர்களும் கட்டுரைகள், கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள் என்பன மூலம் மாற்றுவழி தேடுகின்றனர். ஆனுல் ......

முற்றுப்பெருத ஒரு வாசகத்தை முற்றுப்பெற்ற குரலென எண்ணி மயங்குகின்னர். அது மாற்றப்படவேண்டியது. ''நான்'' காதலெனும் ஒரு வழி சொன்னுல் நானே அதுசரியோ என் வினுக்குறியை கொணர்வேன். உண்மையில் இது தீர்வையல்ல. இத்தகைய காதல் அன்பென ஏங்குவதாயமைந்து பின் மாயமாய் மறைவதை அறிக. என் ஆத்மா, உயிர்யாவும் காதல் உலகே; பலவேதாந்த கருத்துக்கள் இவ்விடத்துப் பிறத்தலைக் காண்கிறேம்.

சில பத்திரிகைகளின் தவருன கருத்துப் பரிமாறலினுல் பெண்களிடையே ஓர் சபலம் பிறக்கிறது. திறக்கப்பட்ட சாளரம் மூடப்படவில்லை. வயதான கன்னிகளின் பெருமூச்சு, சூடாக வெளிப்படுகிறது. இவர்களைப் போய்க் காதல்புரி என்று சொன்னுல் ... புரிந்தாலும் முடிவு ......?

மேலும், காதல் என்பது நினைத்த மாதிரி எல்லோரிடத்திலும் தோன்றிவிடக் கூடியதுமல்ல. அவ்விதம் தோன்றும் போது, ஆயிரம் சிக்கல்கள் அங்கே தோற்றம் பெறுகின்றது. காதல் என்ற நோயைக் கொடுத்து சீதனத் தொகையைப் பறிப்பதற்காக முதலிற் சொன்ன மூன்று எழுத்து சொல்லை, தம்முள் உமிழ்ந்து கொண்டு எத்தனையோ காளைகள் உலாவுகிருர்கள். சமுதாயப் பார்வையிலிருந்து விலக்கிவிடப்பட்ட ஒரு சிலர் காதல் போர்வையில் புகுந்துவிட்டபோது சீதனம் அள்ளி வீசப்படுகிறது.

இனி சமூகப்பார்வையில் இதற்கு விளக்கமளிப்பின் மனதில் ஏற்ப டும் தாக்க விளைவுதான் காதல் அரும்பு என்னும் இதில் பிணைக்கப் பட்டோர் எப்படியும் வாழ்வில் இணைக்கப்பட்டோரே எனும் தப்ப பிப்பிராயங்கள் பிறக்கின்றன. தற்செயலாக அவ்விதம் ஒரு சிலர் இணைக்கப்பட்டாலும், 'கண்ணீரும் கம்பலை'யுமாக முற்றுப்பெருத தன் மையில் ஏன் தொடங்கினேம் எனும் உண்மை துலங்க வாழ்ந்து பின் மாழ்ந்து போவதைக் காண்கிறேம்.

இந்த கருத்துத் தொகுப்பில் இறுதியாக இரு வழிகள் சரியான பாதையை சமைக்க ஏதுவாய் அமையும் என நினைக்கிறேன். அதா வது கலப்பு, பெண்சங்க இணைப்பு என்னும் வகையில் சொல்லலாம் அதாவது இனம் விட்டு இனம் விவாகம் செய்ய முற்படும்போது அதா வது சமூகத்தில் உயர்ந்தோர் எனும் வகுப்பினர் இறங்கிவரும் போது முன் சொன்ன வாசகம் முற்றுப் புள்ளியை அடையலாம் அதே போல் இரண்டாவதாக வெளியிட்ட கருத்தும் இதற்கு ஆதரவளிக் கும் கன்னிப் பெண்களெலாம் ஒன்றுசேர்ந்து ''சீதனத்திருமண சட்ட மறுப்பு இயக்கம்'' தொடங்கி மனத்திடம் பூணும் நிலையில் இதில் வெற்றி காணமுடியும்.

— செ. மோகநாதன் —
கரவெட்டி

● ● ●

## சீதன ஒழிப்பு இயக்கம்

இந்தச் சீதனப் பிரச்சனை எதனுல் எழுகிறது? திருமணம் என்று ஒரு சொல் வந்துவிட்டால். சீதனம் எவ்வளவாம்? என்ற ஒரு வச னம் வராமல் விடுவதேயில்லை. இங்கு தான் நாங்கள் தீர்வு காண வேண்டிய இடம் இருக்கிறது. இதை ஒரு தியாகமாகவும் எடுத்துக் கொள்ளலாம். இது ஒருவருக்காக ஒருவர் செய்யும் தியாகமல்ல, இனிவரும் இளம் சகோதரிகளுக்கு. இப் பிரச்சனை வராமல் தடுக்கும் ஒரு தியாகச் செயலாக அமையட்டும். பெண்கள் தங்கள் மனதினைக் கட்டுப்படுத்தி ஆண்கள் இல்லாமல் பெண்கள் வாழமுடியும் என்ற அசட் டுத் தைரியத்துடன் பெண்கள் எல்லோரும் ஒரு இயக்கத்தினை ஆரம் பிக்க வேண்டும். ஆண்களின் உழைப்பில் உண்டு, அவர்களின் காலடி யில் விழுந்து கிடக்கும் அந்த அடிமைவாழ்வை நீக்கி எங்களுக்கும் திறமையுண்டு அதை நாங்கள் நல்ல முறையில் பயன்படுத்துவோம் என்ற மன உறுதியுடன் ஒன்று திரட்டிய இயக்கத்தின் மூலம் மூலத னத்தினைப் பெருக்கி உழைக்கவும் முனைய வேண்டும். இம்முறையினுல்

தற்போதுள்ள பெண்களுக்கு மிகவிரைவில் மணவாழ்வு கிட்டாவிட்டாலும் இனிவரும் பெண்களுக்காவது அந்தந்த வயதில் திருமணம் சுலபமாக நடக்க முடியும்' இதனுல் ஆண்வர்க்கம் தலைகவிழ்ந்து சில வேளை சீதனம் கொடுத்தே பெண்களை மணமுடிக்க வேண்டிய நிலையும் அவர்களுக்கு ஏற்படலாம்- இந்நிலையினைக் கொண்டுவருவதற்கு இளம் பெண்கள் எல்லோரும் ஒன்று படவேண்டும். அப்போது தான் ஆண்வர்க்கம் தங்களின் தவறினையுணர்ந்து சீதனப் பிசாசாகிய பெற்ருேரின் தீய செயல்களை கண்டித்து ஒரு நல்லமுடிவுடன் பெண்களுக்கு வாழ்வு கொடுக்க முன்வருவார்கள். இதைவிட்டு காதல் திருமணம் செய்தால் வாழ்வின் முற்பகுதி இன்பமாகக் .கழியும் ஆனுல் நடுப்பகுதியில் ஆண்மகனுக்கு பெற்ருேரின் உந்துதலினுல் சீதனவெறி பிடிக்கவும் நேரிடும். இதனுல் அந்த ஏழைப்பெண் தாய்வீட்டிற்கு விழுந்தடித்து ஓடிவரவும் செய்திடுவாள் இக்காலத்தில் தன் கையே தனக்குதவி என்று வாழ்வதே மேல், பெண்கள் ஒரு பூவைப் போல். பூவைக் கசக்கிவிட்டால் எப்படியோ அப்படித்தான் காதல் திருமணத்தின் முடிவுமிருக்கும். இதனுல் பெண்கள் திருமண நினைவினை விடுத்து மனவுறிதியுடன் ஒன்றுபட்டு தமக்குள் ஓர் இயக்கத்தினை ஆரம்பித்துஆண்களுக்கு நாங்கள் சளைத்தவர்களில்லை என்று கூறுமளவிற்கு வாழ்ந்தால் சீதனப் பிரச்சனைக்கு ஓரளவு தீர்வுகாண முடியுமென்று நான் நம்புகின்றேன்.

— M. பத்மா மாலினி, —
பாஷையூர்.

★ ★ ★

பாரட்டப்படுவோர்:

(1) S. F. அருள் நேசன்,
சாவகச்சேரி.

(2) T. S. C. அமலதாசன்,
மணிப்புரி.

(3) இராக்கினி தேவி,
உடுவில்.

(4) யே. யே. மவுளிஸ்,
பெரியவிளன்.

(5) த. ஞேசலின்,
சண்டிலிப்பாய்.

(6) P. ஜன்சி,
உருத்திரபுரம்.

(7) S. R. T. திருவழகன்,
இளவாலை.

(8) R.P.J. பாக்கியராஜ்,
முல்லைத்தீவு.

# வசந்தங்கள் வாழ்த்துச் சொல்ல... [4]

— ராணி மேரி —

அனிதாவுடன் உறவைச் சீராக்கிக் கொள்ள உண்மையிலேயே நான் விரும்பினேன். ஆனல் ஒரு வரட்டுக் கௌரவம் — 'நானுக அவளிடம் போகக் கூடாது' — என்னைத் தடுத்துக் கொண்டிருந்தது. அத்தோடு உள்ளமும் இன்னமும் புகைந்து கொண்டிருந்ததால் அவளைச் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பங்களையும் இயலுமான வரையில் தவிர்த்து வந்தேன். மனிதனுக்குள்தான் எத்தனை முரண்பாடு; மனம் நியாயமான ஒன்றைச் செய்ய விழைந்தாலும் வரட்டுத்தனமான கருத்துக்கள் அதனைத் தடுத்து விடுகிறது. அவள் என்னிடம் வந்தாலென்ன நான் அவளிடம் போனுலென்ன, ஒரு சகோதரியுடன் என்ன கௌரவம் பார்ப்பது என்ற உண்மை செயல் வடிவம் பெருமலேயே இருந்து வந்தது. அவளுடைய பிறந்த நாளுக்கும் கடிதம் எழுதாமல் வாழ்த்திதழ் மட்டும் அனுப்பினேன். நன்றி தெரிவித்து அவளிடமிருந்து பதில் கிடைத்தது. கடந்தமுறை புதிய வருடம் எனக்கு அனிதாவின் வீட்டில். இம்முறையும் அங்கே போக எண்ணியிருந்தேன். அங்கு போனுல் அனிதாவுடனன மனஸ்தாபம் புதுப்பிக்கப்பட்டு விடுமோ புதிய வருடத்தன்று எதற்கு வீண் தகராறு — போகாமல் இருந்து விட்டேன். ஒருநாள் கொழும்பில் வேலை செய்து கொண்டிருக்கும் அனிதாவின் அக்கா புனிதத்தைச் சந்திக்கச் சென்றேன். பேசிக் கொண்டிருந்த சமயம் ''அனிதாவும் இங்கேதான் நிற்கிறு, கூப்பிடவா?'' என்றுள் புனிதம். நான் பதில் சொல்லவில்லை; நான் வந்திருப்பது தெரிந்து அவளாக வந்தால் வரட்டும் — வரும்படி நான் கூப்பிடக் கூடாது — மீண்டும் அந்த வரட்டுப் பிடிவாதம் **''அன்புடன் மனிதர் பழகுவதற்குத் தடையாகப் பல சமயங்களில் மான உணர்ச்சிகளும், சில விசேடமான தனி மனிதப் பண்புகளும் குறுக்கே நின்று விடுகின்றன. அது போல் அவர்கள் பிரிவதற்கும் அதே உணர்ச்சிகள் துணை நிற்கிறது.''** என ஜெயகாந்தன் ஒரு நூலில் கூறியிருந்தது நினைவுக்கு வந்த போதும் நான் அவளைச் சந்திக்காமல் திரும்பி விட்டேன். வழியில்தான் விடுமுறைக்கு ஊருக்குப் போகும் போது எனது வீட்டுக்கும் வர வேண்டுமெனப் புனிதத்திடம் கூருமல் விட்டது நினைவுக்கு வந்தது. திரும்பவும் போனேன். அக்காவுடன் அனிதாவும் வந்தாள். ''வந்திருந்தது நீங்கள் என்று தெரியாதபடியால்தான் நான்

முதலில் வரவில்லை'' சாதாரண மாகப் பேசினுள் அனிதா. நான் அதிகமாக அவளுடன் பேச வில்லை. மறந்த விடயத்தைப் புனிதத்திடம் கூறிவிட்டுத் திரும்பி விட்டேன். புனிதத்தால் வீட்டுக்கு வரமுடியவில்லை; அனிதாவும் அவளது தம்பியும் மட்டும் வந்தனர். அவர்களது வருகை மிகவும் மகிழ்ச்சிக்குரிய தாக இருந்தது. எமது மனஸ்தாபம் பற்றி அனிதாவோ நானே ஒன்றுமே கதைக்கவில்லை. அன்று முழுவதும் அந்த விடயத்தை மறந்து விட்டேன் என்றே கூற லாம்.

என்னிடம் ஒரு பழக்கம் — பழக்கம் என்பதைவிட கொள்கை என்றே கூறலாம். நான் அன்பு காட்டுபவர்களுடன் ஏதாவது மனஸ்தாபம் ஏற்பட்டால் அவர்களுடன் வழக்கம் போல் பழக என்னுல் முடிவதில்லை. மனஸ்தாபத்தை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் — அதனை மறைத்துக் கொண்டு போலியானதொரு உறவைக் கொண்டிருக்க நான் விரும்புவதில்லை. நான் ஏதாவது தவறு செய்யும் போதும் என்னேடு நெருங்கியவர்கள் அதனை உரிய முறையில் எனக்குச் சுட்டிக் காட்ட வேண்டுமென நான் எதிர்பார்க்கிறேன். எனது தவறுகளை எடுத்துக் காட்டி என்னைத் திருத்த விரும்பாதவர்கள் என்னில் அக்கறையற்றவர்கள் என்றே நான் கருதுகிறேன். இந்தக் கொள்கையை எனது நண்பர்கள், சகோதர, சகோதரிகள் மற்றும் என்னேடு நெருங்கிப் பழகுவோரிடமும் நான் கடைப்பிடிக்கின்றேன். சிலருக்குக் குறிப்பாலும், இன்னுஞ் சிலருக்கு நேரடியாகவும் அவர்களது தவறுகளைச் சுட்டிக் காட்டுகிறேன். இந்தக் கடமையில் தவறினுல் அவர்கள் மட்டில் எனக்குள்ள பொறுப்பை அலட்சியம் செய்து அவர்கள் வாழ்வு கெட நானும் காரணமாகிவிடக் கூடும். தவறுகளை எடுத்துக் காட்டினுல் உறவு முறிந்து விடும் என்ற அர்த்தமற்ற எண்ணம் எனக்கில்லை. என்னேடு பழகுபவர்களுடன் ஒரு பிரச்சினையைப் பேசித் தீர்க்க முடியவில்லையென்ருல் அவருடன் பழகுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது — மனம் விட்டுப் பேசினுல் மனஸ்தாபம் ஏற்பட்டு விடும் என்று நினைப்பவர்களுடன் என்ன நெருக்கம் வேண்டிக் கிடக்கிறது?

இந்தக் கொள்கையடிப்படையில் அனிதாவுடன் நான் முன் போல் பேசுவதையோ பழகுவதையோ தொடராமல் இருந்து விட்டேன். இச் சந்தர்ப்பத்தில் எனது உடன் பிறந்தவளின் திருமண நாள் வந்தது. அனிதாவுக்கு அழைப்புக் கொடுப்பதா — முன்னர் சந்திக்கும்படி கேட்டதை அலட்சியம் செய்தவளைத் திருமணத்திற்கு அழைக்க வேண்டுமா? திருமணத்திற்கு இன்னும் சில தினங்களே இருந்தபோதுதான் ஒரு முடிவுக்கு வந்தேன். அவளோடு என்ன மனஸ்தாபம் இருந்தாலும் அழைப்புக் கொடுக்

கத்தான் வேண்டும். எனது வரட்டுக் கௌரவத்தைப் பாருங்கள், திருமண அழைப்பிதழை வீட்டுக்குள் சென்று கொடுப்பதுதான் வழக்கம். நான் வாசலில் வைத்து அழைப்பைக் கொடுத்து விட்டு அவளோடு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் வந்து விட்டேன். கடும் மழை காரணமாக திருமணத்திற்கு அவளால் வரமுடியவில்லை. பின்னர் வீட்டுக்கு வந்தாள். பின்னர் இரண்டொருமுறை அவளைச் சந்திக்க நேர்ந்தபோது வழக்கம்போல் பேசினுள், தேநீர் தந்தாள், அருந்தினேன். ஆனுல் என்னுல் அவளோடு முன்போல் பேச முடியவில்லை – ஏதோவொரு பிடிவாதம் என்னை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தது. இவ்விதம் சந்தித்தபோது அவள் கூறிய சில வார்த்தைகள் அவள் என்னேடு பழகுவதை விரும்பவில்லையோ என்ற ஐயத்தை ஏற்படுத்திற போதும் பொறுத்திருந்து பார்ப்போம் என எண்ணிக் கொண்டேன். குறிப்பிட்டபடி முன்னர் ஏன் என்னைச் சந்திக்கவில்லையெனக் கேட்டதற்கும் அவள் தெளிவான பதிலைத் தரவில்லை. நானும் துருவிக் கேட்கவில்லை. அவளுடன் வழுவழுத்த தொரு உறவைக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. உறவைத் துண்டித்தாலும் அதனை உரிய முறையில் செய்வதே எனது எண்ணம். என்னைச் சந்திக்கும்படி கேட்டுக் கடைசி முறையாகக் குறிப்பொன்று அனுப்பினேன். நானே வலியப்போய் அவளுடன் சமரசமாக விழைகிறேன், எனக்கு வேறு வேலையில்லையென அவள் நினைத்தாலும் பரவாயில்லை.

நான் கூறியவற்றை எழுத்தாளர் நடராசன் 'தலை குனிவு' என்ற தலைப்பில் தொடர் கதையாகச் சஞ்சிகையொன்றில் எழுதிக் கொண்டிருந்தார். பொருத்தமான தலைப்புத்தான் என நானும் நினைத்திருந்தேன். நான் கேட்டுக் கொண்டபடி அனிதா என்னைச் சந்திப்பதற்கு இரண்டொரு நாள் முன்னதாக நடராசன் தொலைபேசியில் கேட்டார், ''கதையை முடிக்க வேண்டும். என்ன முடிவு செய்திருக்கிறீர்கள் — அந்தப் பெண்ணை இன்னமும் சந்திக்கவில்லையா?'' அனிதா என்னைச் சந்திக்க விருப்பதைக் கூறி அதன் பின்னர் எனது வீட்டுக்கு வந்தால் முடிவைக் கூறுகிறேன் என அவருக்கும் வீட்டுக்கு வரும்படி அழைப்பு விடுத்தேன்,

குறிப்பிட்டபடி அனிதா வந்தாள். அவளது பிரச்சினை பற்றிய சில விடயங்களை மனம் திறந்து சொன்னுள். பேசும் போது அவளது கண்களில் கண்ணீர் திரையிட்டது. சொல்வது வேதனையென்றுல் நடைபெற்றவை எவ்வளவு வேதனையைக் கொடுத்திருக்கும் அவளுக்கு. அவள் விஷயங்களை விளக்குகையில்தான் நான் விட்ட மாபெரும் தவறும் எனக்குத் தெரிந்தது. குற்றவுணர்வு என்னைத் துளைத்தது. இதனுல் அவள்

சொன்ன விடயங்களில் மேற் கொண்டு எனது கவனஞ் செல்லவில்லை. அவள் அந்த வாலிபனுக்கு ஆமென்று சொல்லப் போவதறிந்து நான் ஆத்திரமடைந்தேன். ஆனுல் அந்தச் சமயத்தில் நான் அனிதாவுடன் மிகவும் பரிவுடன் நடந்து கொண்டிருக்க வேண்டும். அவளது கண்ணீரைத் துடைக்க வேண்டிய சமயத்தில் கடுமையாக நடந்து கொண்டேன் — தனது கவலையைப் பகிர்ந்து கொண்டு அன்பை எதிர்பார்த்தவளை அவளது பிரச்சினையின் உச்சக் கட்டத்தில் கைவிட்டிருக்கிறேன். நான் ஏன் அன்று அவ்வளவு முரட்டுத்தனமாக நடந்து கொண்டேன்? எனக்கே புரியவில்லை. இப்படி எந்தவொரு சமயத்திலும் நான் நடந்து கொண்டது கிடையாது. ஒருவர் செய்யும் காரியம் அவரது நிலைக்குப் பொருந்தாது என நாம் கருதுகையில் அவர் அக் காரியத்தைச் செய்யும் போது நமக்கு ஆத்திரம் பீறிட்டெழுகிறது. ஆனுல் உண்மையில் அது ஆத்திரமல்ல அவர் மீது நாம் கொண்டிருக்கும் மதிப்புக்கு ஒவ்வாத செயலைச் செய்து விட்டார் என்றதனுல் ஏற்படும் ஆற்ருமையின் பிரதிபலிப்பு என்றுதான் சொல்ல வேண்டும். அனிதா — நான் தங்கையாக நேசிக்கும் ஒருத்தி — இப்படியானதொரு பிரச்சினைக்குள் தன்னை உட்படுத்திக் கொண்டாளே என்ற தவிப்பின் வெளிக்காட்டல்தான் அன்றைய எனது முரட்டுத்தனமோ? எப்படியாயினும் தனது பிரச்சினையில் உதவுவான் என நம்பியிருந்தவளுக்கு நான் செய்தது ஒரு வகையில் ஏமாற்றம்தான். நான் இருக்கையில் அந்த வாலிபனுடன் அனிதா பேசியதைப் பெரிது படுத்திக்கொண்டு எனது கடமையில் தவறி விட்டேன். அவள் ஆமென்று சொல்ல எண்ணியிருந்தது பற்றி நான் ஏன் மேற் கொண்டு எதுவும் செய்யவில்லை?

அவள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்ற எண்ணமா? இல்லை நிச்சயமாக இல்லை. கையாலாகத்தனமா? அப்படியும் இல்லை. ஏதாவது செய்திருக்க முடியும். ஆனுல் எனது எண்ணப்படி நடந்து கொள்ளும்படி அவளைக் கேட்க எனக்கு அதிகாரமுண்டா? — அந்த அளவுக்கு நான் உரிமை எடுத்துக் கொள்ளலாமா? என்ற எண்ணம் தோன்றவே, அவள் வீட்டுக்குத் தானே போகிருள் தாயுடன் பேசி அவர் சொல்வதைச் செய்யட்டும் என விட்டு விட்டேன்.

என்னை ஏன் அன்று அவமானப் படுத்தினுள் என்பதனை அறிவதற்காக அனிதாவை அழைத்திருந்த போதும் அவளோடு பேசியதன் பயனுகத் தெரியவந்தது எனது தவறுதான். அவள் எனது உடன் பிறந்தவள் என்பது எண்ணத்துடன் நின்றுவிட்டது — அதற்குரிய வகையில் நான் நடந்து கொள்ளவில்லை. என்னை நினைக்க எனக்கே வெட்கமாக இருந்தது. சே! எவ்வளவு அரக்கத்தனமாக அன்று நடந்து விட்டேன். அவள் எழு

திய அந்தக் கடிதத்திற்கும் பதில் எழுதாமல்... என்னிடமிருந்து ஆதரவான, ஆறுதலளிக்கும் வரிகளை எதிர் பார்த்திருந்தவளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டேன். அந்தக் கடிதம் அவளது கவலையைத் தெட்டத் தெளிவாக எனக்குக் கூறியும் என் மனம் ஏன் தான் அப்படி இறுகிக் கல்லானதோ? எவ்வளவு அன்புடன் அவளுடன் பழகினேனோ அதற்கெதிர்மாருகக் கொடுமைக் காரனுக நடந்துவிட்டேன். அதிகமாக நாம் அன்பு காட்டுபவர்களிடம் நமக்கு அதிகமாகக் கோபமும் வருகிறதோ?

குறிப்பிட்ட நாளில் நடராசன் வீட்டிற்கு வந்தார். வழக்கமான உபசரிப்புகளின் பின் எமது உரையாடல் தொடங்கியது, எனது மனைவி பத்மாவும் கூடவே இருந்தாள். அனிதா அன்று கூறியவற்றையும் எனது தவறினையும் அவருக்கு விரிவாக எடுத்துரைத்தேன்.

''தம்பி,நீர் செய்தது பிழைதான். அவளுக்கு அந்த நேரத்திலை தேவைப்பட்டது பரிவும் ஆதரவுந்தான். உம்முடைய முரட்டுத்தனத்தாலை அவளுடைய கவலையை நீர் கூட்டி விட்டீர்''

ஒரு மூத்த சகோதரன் போன்று நடராசன் கண்டித்தார்.

பத்மா பேசினுள் ''நீங்கள் சொல்றது சரிதான் இவர் அப்பிடி நடந்திருக்கக் கூடாதுதான். எனக்குச் சொல்லியிருந்தால் உடனேயே அவளைச் சந்திக்கும்படி இவரை அனுப்பியிருப்பேன். அனிதா இங்கை வந்தபோது நானும் கதைச்சனுன். இவர் செய்தது அவளைச் சரியாக வேதனைப் படுத்தியிருக்கு. ஆனுல் இவரைப்பற்றிக் குறையாக ஒரு சொல் அவள் சொல்லவில்லை. அவளின்ரை அந்தக் கடிதத்தை நானும் வாசித்தனுன். இவர் ஒரு இரக்கமில்தாத மனிசன்.''

நடராசனைப்பற்றி ஏற்கனவே பத்மாவுக்கு நான் கூறியிருந்தபடியால் அவர் முன் பேச அவள் அவ்வளவு தயக்கம் காட்டவில்லை

''உண்மைதான் பத்மா. அனிதா பெருந்தன்மையானவள்தான். நான் கேட்ட போது என்னிலை தனக்கொரு மனத் தாங்கலும் இல்லையெண்டு சொல்லிப் போட்டாள். தன்ரை கவலைகளை மறைச்சுக்கொண்டு என்னுேடை வழக்கம் போலை சிரிச்சுக் கதைச்சாள். அவளைவிட நான் வயதில் மூத்தவனுக இருந்தும் பெருந்தன்மையாக நடக்கேல்லை.''

''நீங்கள் மட்டும் சொன்னதைக் கேட்டு நானும் அவளைக் குறைசொன்னது பெரிய பிழை'' பத்மா.

நான்கு நீதிபதிகள் முன் நான் குற்றவாளியாக நிற்கின்றேன். நடராசன், பத்மா, அனிதாவின் மௌனமான வேதனை, எனது மனச்சாட்சி, என்னுல் தனக்கேற்

பட்ட கவலையை அனிதா வெளியாகச் சொல்லா விட்டாலும் அவளது சில பேச்சுக்களும் செயல்களும் அவளையறியாமலே அதனை வெளிக்காட்டியது. அனிதாவுக்கெதிராக நான் சுமத்திய குற்றங்கள் அனைத்தும் கலைந்துபோக மேற்குறிப்பிட்ட நான்கு நீதிபதிகளும் காட்டும் குற்றத்திற்குபதில் சொல்லமுடியாமல் நான் தவித்தேன். இந்த இக்கட்டான நிலையில் எனது உள்ளத்தில் ஒரு குரல் 'ரவி, உன்னுடைய கோபம் காரணமாக ஒரு சகோதரிக்குச் செய்ய வேண்டிய வெளியரங்கமான கடமையை நீ இடையில் செய்யாது விட்டிருக்கலாம். ஆனல் அவளுக்காக நீ உள்ளரங்கமாகக் கடவுளை வேடியிருக்கிருய் — அந்த வேண்டுதலும் கிடைத்தது அதற்கு நன்றியாக நீ கொடுத்ததை மற்றவர்கள் அறியாதிருக்கலாம் ஆனல் அது வெளியாக நீ செய்யத்தவறியதை ஈடு செய்து விட்டது. எனவே உனது கடமையில் தவறியதாக வருத்தப்படாதே. ஆனல் அன்பு தேவையான சமயம் செயல் வடிவம் பெருவிடில் அதன் பயனென்ன? ஒருவருக்காகச் செபிப்பதும் அன்புச் செயல்தான் எனினும் அது மட்டும் போதுமா? அவசியமேற்படும் போது அன்பு செயல் வடிவம் பெறவேண்டும் இப்போது கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. அந்த விடயத்தில் நான் தவறுசெய்யவில்லை என்றெண்ணும் போது மனதுக்கு இதமாக இருந்தது இதனை அனிதாவுக்கும் சொல்ல வேண்டும். அப்போது மனதுக்கு இன்னமும் கூடுதல் அமைதிகிட்டும். அவளுக்காக இன்னும் பலர் வேண்டுதல்களைச் செய்திருக்கலாம் அதனை நான் மறுக்கவில்லை. அனல் நான் செய்த வேண்டுதலும் அதற்காக நான் கொடுத்ததும் எனக்குத் திருப்தியளிக்கிறது.

''தம்பி, வருத்தப்படாதேயும். ஏதோ இரண்டு பேருடையவும் நன்மைக்குத்தான் இந்த மனஸ்தாபம் உங்களுக்கிடையிலை வந்திருக்க வேணும். சகோதரங்களுக்கிடையிலை சச்சரவு வாறது சாதாரண விஷயம். ஆனல் அந்த சச்சரவை நீடிக்க விடுறது பெரிய பிழை. இப்ப எல்லாஞ் சரிதானே ஒரு ஆண் பிள்ளையான உம்முடைய மனம் முன்னர் இவ்வளவு வேதனைப்பட்டிருந்தால் ஒரு பெண்ணின் மென்மையான மனம் என்ன பாடுபட்டிருக்கும். இனிமேலாவது இப்படி முரட்டுத்தனமாக அவளோடு நடக்காதேயும்.''

''அனிதாவோடை இனிமேல் ஏதாவது சச்சரவு இருந்தால் அண்டைக்கு இவருக்கு இஞ்சை சாப்பாடு கிடையாது. பொம்பிளையளுடைய மனதை விளங்காத உங்களுக்கெல்லாம் என்னத்துக்கு தங்கச்சிமார்? எங்கையாவது சுடலை மடத்திலை போய் இருக்க வேண்டியதுதானே. ஏதோ இவற்றை மானம் போட்டுதெண்டு அண்டைக்குத் துள்ளினர் உங்கடை மானமோ அவள் பட்ட மனவேதனையோ பெரிசு?''

பத்மா எப்போது அனிதாவின் கட்சிக்கு மாறினுள்? எனக்குப் புரியவில்லை. ஆனுல் அவள் சொல்வது சரிதான். ஒவ்வொரு மனிதனும் கடவுளின் அம்சமென்ற கருத்தின்படி பார்த்தால் ஒரு மனிதனை வேதனைக்குள்ளாக்கும்போது நாம் கடவுளையே துன்பப்படுத்துகிறேம். முன்பு அவமானமென்று துடித்த இதயம் இப்போது வேதனையினுல் பொருமுகிறது.

— தொடரும். —

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவுகள்

### இலக்கம் 15

**இடமிருந்து வலம்**

1 — 5 குவலயம்
13 — 16 கர்வம்
33 — 36 லிங்கன்
31 — 32 ஊழ்

**வலமிருந்து இடம்**

9 — 7 தவறை

**மேலிருந்து கீழ்;**

1 — 19 குறைகளை
6 — 24 ஸ்ராலின்
9 — 21 தவம்
20 — 32 தமிழ்

**கீழிருந்து மேல்;**

17 — 5 மானம்
29 — 5 தன்மானம்
28 — 16காமம்

போட்டியில் பங்கு கொண்ட அனைவருக்கும்
எமது பாராட்டுதல்கள்.

ஆனுல் எவருமே சரியான முடிவுகளை அனுப்பிவைக்கவில்லை.

# தாம்பத்திய ராகங்கள்

இரு உடல்கள் ஆனல் ஒரே இதயம் –
ஓர் இரத்தம்
இரண்டு வீணைகள் ஆனல் ஒரே கீதம் –
வாழ்க்கை ராகங்கள்
இருவர் இதயக் குமுறல்கள் ஒரே துடிப்பில் –
புரிந்து கொள்ளல்
இருவர் சிந்தனை ஆனல் இதயத்தில் சங்கமம் –
விட்டுக் கொடுத்தல்

இதுதான் தாம்பத்திய உறவு. இவ்வுறவில்தான் தம்பதிகள் ஒருவர் மற்றவருக்காக வாழும் நிலையை பகிர்ந்து கொள்கிறார்கள். இவ்வுறவில் தான் மனைவி தன்னை முற்றுமுழுதாக கணவனுக்கும், கணவன் தன்னை முற்றும்முழுதாக மனைவிக்கும் கொடுக்கும் அன்பின் உச்சநிலை உதயமாகின்றது. அவ்வாறே கணவனின் எதிர்பார்ப்புக்களை மனைவியும், மனைவியின் எதிர்பார்ப்புக்களை கணவனும், அறிந்தும் புரிந்தும் செயற்படுவதில் தாம்பத்திய உறவுகள் பிரிந்து போகாமல், சிதைந்து போகாமல் உயிருடன் நிலைத்து வாழ, மகிழ்வுடன் வாழ, சீரும் சிறப்புடனும் வாழ வழி சமைக்க வேண்டும்.

வாழ்க்கையில் உதயமாகும் 'தூய அன்பு' பல சிக்கல்கள் நிறைந்ததாக சித்தரிக்கப்படுகின்றது. அதில் உண்மை இல்லாமலில்லை ஆனல் அவ்வளவு சுடர்விட்டு ஒளி கொடுக்க வேண்டுமாயின், கொழுந்து விட்டு வளரவேண்டுமாயின் உதைபட, மிதிபட ஆயத்தமாகத்தான் இருக்க வேண்டும். மோதல்கள், முனகல்கள், குமுறல்கள், முறுமுறுப்புக்கள் தாம்பத்திய வாழ்வில் தவிர்க்கமுடியாத வாழ்க்கையின் உரங்கள், எப்படி இருந்தாலும் வாழ்வில்,

''நல்லுயிர் நீயெனக்கு, நாடியடி, நானுனக்கு''

என்று பாரதியின் துடிப்புடன் பாடவேண்டுமானல் ''தூய அன்பு' தம்பதியரின் இதயங்களிலிருந்து உதயமாக வேண்டும்.

— செபஸ்ரி நிக்கிலஸ் —

## உளவியலாளர் வரிசையில் ...... ......

### சிக்மன் புரொயிட் (1856 – 1936) 3
(Sigmund Freud)

இவர் யூத வம்சத்தைச் சேர்ந்த ஓர் ஆஸ்திரிய உளமருத்துவராவர். இவரே உளப்பகுப்பியலை (Psycho - analysis) நிறுவியவராவர். கனவுகள் விடயமாக இவர்கூறும் விளக்கங்கள் மிகப்பிரசித்தமானவை. அதைக்கொண்டு மனக்கோளாறுகளுக்கு காரணம் கண்டுபிடிக்க முடியுமெனக் கருதினுர். உளவியல் நரம்புமண்டல மனக்கோளாறுகள் என்பவற்றின் தன்மையையும் அமைப்பையும் பற்றிப் புதுஉண்மைகள் பல கண்டு பிடித்துள்ளர். இவரின் ஆராய்சிகள் உளவியலின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. நாம் மறந்துபோனதாகவோ எண்ணும் அனுபவங்களைப்பற்றி ஆராயவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினுர். பால் இயல்பூக்கம் (Sex instinct) குழந்தைப் பருவமுதலே ஒருவனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும்பங்கு கொள்கிறது என இவர் வற்புறுத்தினுர்.

தற்கால பிறழ்வு உளவியலின் தந்தையும், உளக்குணமுறையில் உளப்பகுப்பாய்வினை ஒரு முறையாகக் கொணர்ந்த காரணகர்த்தாவும் இவரே. ஒருமிகுந்த அறிவுச் செழுமையும், அறிவியற் பாங்கினையும் கொண்டவரான இவர் உளவியற் சிந்தனையில் ஓர் உண்மையான மறுமலர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளார். இவர் திகைப்புக்குரிய, கணக்கற்ற நூல்களையும், குறிப்பு நூல்களையும் எழுதியுள்ளார்.

அண்மை ஆண்டுகளில் பிறழ்வு உளவியல் ஒரு பெரும் பிரிவாக வளர்ச்சியடைந்தது. நனவிலிநிலை (Unccnscious) உள்ளத்தின் பங்கு பல உளவியலாளர்களின் தன்மை, அதன் வேலை, பிறழ்வின் பொதுமைக்கருத்து, பிறழ்வு நடத்தையின் வகைகள், பிறழ்வு நடத்தையின் கொள்கைகள் போன்றவை பற்றிய ஒரு பெருமளவுத் திட்டம் வளர்க்கப்பட்டது.

புரொயிட் உளப்பாய்வுத்துறை (Psycho - analytic school) இப்பிரிவின் பெரும் அமைப்புக்குப் பெருமளவு அடித்தளமாக இருப்பினும் மேலும் பற்பல பிரிவுகளான உளமருத்துவம் (Psychiatry) மனிதவியல் (Anthropology) விலங்குளவியல் ஆகியனவும் அவற்றின் பங்கினைப் பகிர்ந்தளித்துள்ளன. மருத்துவ உளவியல், உளவியல் கோளாறுகளுக்குச் சிகிச்சை செய்வதற்குப் பிறழ்வு உளவியலின் பொதுவான கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தும் பயன்முறைப் பகுதியாகும். பிறழ்வு உளவியலானது பிறழ்வு உளவியலின் நடத்தையை

அறிந்து கொள்ள முயற்சி செய்யும் கோட்பாடு அம்சங்களைப் பற்றிப் பார்க்கின்றது. உளமருத்துவ உளவியல் ஒரு குறிப்பிட்ட நோயாளியினது நோயின் தன்மையைக் கண்டறியவும், குணப்படுத்தவும் உள்ள முறைகளை அளிக்கின்றது.

இவர் தனது ஆய்வுகளின் விளைவாக ஆளுமையில் **Id** (அது) **Ego** அகம், **Super ego** (அதியகம்) என்ற மூன்று கருத்து நிலையிலான ஆளுமைக் கூறுகள் பற்றிய கோட்பாடொன்றை விடுத்துள்ளார். இம்மூன்று கூறுகளும் ஒருவன் செய்யும் வேலையைச்செய்யத் தூண்டும் உள்ளார்ந்த விசைகள் என்றும் இவைகள் ''**ஆழக்காரணிகள்**,' (**Depth factors**)எனவும் புரொயிட் கூறியுள்ளார். ஒருவனுடைய நனவிலி (**Unconscious**) உள்ளத்தினுள் உள்ள முக்கிய கூறே **Id** என்பதாகும். அது அவனுடைய இயல்பூக்கங்களுடன் தொடர்புடையது. அது நீதி, நியாயம் ஏற்காது. அது உடனடியாக தேவை தணிப்பதையே விரும்புவது, அகம் என்பது நனவு நிலைச் செல்களைக் கொண்ட பகுதியாகும். இது '**Id**' உடனும் வெளியுலகுடனும் தொடர்புடையது. அது இப்பகுதியையும் அதியகப்பகுதியையும் சமநிலையில் வைத்துக்கொள்ளும். அதியகம் என்பது நாம் வழக்கில் கூறும் மனச்சாட்சி விழுகியம் என்பவற்றுடன் தொடர்புடையது. ஒரு பிள்ளை வளர்ச்சியடையும்போது அவன் தனது பெற்றோர், தோழர் ஆகியோரின்விழுமியங்களைஏற்றுதனதுஅதியகத்தைவிருத்தியாக்குகிறுன்.

புரொயிட்டின் கருத்துப்படி, இட்அதியகம் ஆகியவற்றின் முரண்பாடான தேவைகளை அகம் நடுநிலைப்படுத்தும் வகையில் பிள்ளையின் ஆளுமை விருத்தியாகின்றது. நியாயம் காணல், புறத் தோற்றம் எதிர்த்தாக்கம் உண்டுபண்ணல் போன்ற செயன்முறைகளைப் பயன்படுத்தி அகமானது இவ்வாறுன செயல்பாடுகளைத் தவிர்க்கின்றது.

பிள்ளையின் உள-பாலியல் வளர்ச்சியில் உள்ள படிகள் பற்றி புரொயிட் எடுத்துரைத்துள்ளார். பிள்ளை எவ்வாறுன பாலியல் இன்தைத் தன் உணர்ச்சி உறுப்புகளினுல் சுவைக்கின்றது என்பதைப் பொறுத்தே இவ்வளர்ச்சிப்படிகள் அமைந்துள்ளன. ஏதேனும் ஒரு வளர்ச்சிப்படியில் பிள்ளைக்குத் தன் இன்பம் தேடும் செயலில் தடை அல்லது மனமுறிவு அல்லது அளவுக்கு மீறிய தொழிற்பாடு ஏற்படுமானுல் அவனின் அகம் என்னும் ஆளுமைப்பகுதியின் வளர்ச்சி தடைப்பட்டு அவனின் ஆளுமை வளர்ச்சி பாதிக்கப்படும்.

**செல்வி இ. பாலாம்பிகை**
**யாழ். பல்கலைக் கழகம்**

சிறுகதை

# அவளின் அரவணைப்பில்....

செல்வி. T. R. யேசுதாசன், கொழும்பு - 3

மீனு நெற்றியைத் தடவிக் கொண்டாள், வாழ்க்கையே வெறுத்துவிட்ட உணர்வு. காதல் .. தோல்வி ... விரக்தி ... இதிலிருந்து மீளவே முடியாதா? நுரையாகப் பொங்கும் தன் எண்ண அலைகளை அடக்க முயன்றவளாய் மேசையில் இருக்கும் பைலில் தன் கவனத்தைத்திருப்ப முயல்கின்றாள்.

ஒருவரையொருவர் முன் பின் அறிந்திராத அவனும் அவளும் மூன்று மாதத்திற்கு முன் கருத்தரங்கொன்றில்அறிமுகமானார்கள். ஒருவரின் கருத்து மற்றவருக்குப் பிடித்ததுபோலிருந்தது. அடிக்கடி சந்தித்தனர். மணிக்கணக்கில் பேசினர். ஒன்றாக ஐஸ்கிரிம் சாப்பிட்டார்கள். இருவரும் ஒரு நாளைக்குச் சந்திக்கா விட்டால் தலையே வெடித்துவிடும் என்ற நிலை ஏற்பட்டபோது ஒருநாள் அவன் அவள் கன்னங்களருகே குனிந்து மீனு ''ஐலவ்யூ''என்றான். எதிர்பார்த்திருந்தாலும், திடீரென ஏற்பட்ட மென்மையான அதிர்ச்சியில் அவள் உடல் நடுங்க, அவன் அவளை அணைத்து ... அதன்பின் அலங்காரத்தில் அவள் ஆர்வம் காட்டினாள். அழகு, எங்குமே நிறைந்திருப்பதாக அவள் கண்களுக்குப்பட்டது.

திடீரென ஒருநாள் அவர்களிடையே அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. அரைமணிநேர வாக்குவாதம் ஓர் ஆயுள்கால உறவைக் கத்தரித்தது. ''சீதன அத்திவாரத்தில்தான் நிச்சயம் நல்வாழ்க்கை அமையும் என்ற உங்கள் கருத்தை என்னால் ஏற்கமுடியாது வினோதன்'' ..... நீங்கள் மனது வைத்தால் ... ''ஸ்ரொப் இட் மீனு'' என்னை ஆளாக்கிய பெற்றோரின்... அவன் பாதியில் நிறுத்தியபோது அவள் எழுந்துகொண்டாள். ''ஐ ஆம் சொறி... நாம் பிரியவேண்டிய நேரம் வந்தாயிற்று. ''வீ வில் பி பிரென்ஸ்'' நாகரீகமாகக் கை குலுக்கினார்கள். ஒரு பாதையில் நடந்த இருவரும் எதிர்திசையில் பிரிந்தனர்.

அவளாக எடுத்த முடிவுதான். எனினும் அந்த இதயஏக்கத்தை, எண்ண அலைகளை அவளால் நசுக்கவே இயலவில்லை. ''ஓ கோட்'' இந்த பைத்திய நினைவுகளை மறக்கவேண்டும். தலையைக் குலுக்கிவிட்டு வேலையில் கவனத்தைத் திருப்ப முயலுகிறாள். வேலை,

வேலை, வேலை, விநோதனை மறக்க ஒரே மருந்து வேலை ......

மீனுவின் கூர்மையான அறிவு, ஒவ்வொர் சின்ன விஷயங்களிலும் அவள் காட்டிய ஆர்வம் அவனுக்கு அவளில் பிடிப்பை ஏற்படுத்திய தெனவோ உண்மைதான். ஆனல் சீதனமில்லாத அவளை மணமேடைக்கு அழைத்துச்சென்று, பெற்றோரின் வெறுப்பையும் சகோதரரின் கடுகடுப்பையும் சம்பாதித்துக் கொள்ள அவனுக்கு மனத்திராணியே இல்லை. மீனுவின் உறவு வீட்டில் தெரிந்தபோது வெடித்த பூகம்பத்தில் அவன் சிதறிப்போனுன். எப்போதும் பெற்றோரின் சொல்லிற்கு கீழ்படிந்த பழக்கம் அவர்கள் சொல்வதெல்லாம் சரியென்று ஏற்க வைத்தது.

விநோதன் மறுபக்கம் திரும்பிப் படுக்கிறான். ஐந்து வருஷமிருக்கும் எப்போதோ மறந்துவிட்ட நினைவு மீண்டும்மேன் இன்று...? மீனு! அவளுடன் கழித்த அந்த இனிமையான மணிகள் .. அவற்றை அவள் எடுத்துச்சென்றுவிட்டாள். புதிதாக அவன் பெற்றோரின் ஆசியுடன் அவன் வாழ்வில் நுழைந்த நிருபாவிடம் அவனுக்குப் பிடித்த அந்த ''இனிமை'' இருக்கவேயில்லை.

''நெயில் பொலிஷ்'', லேட்டஸ் டிரெஸ், பியூட்டி கெயர், இவற்றைத்தவிர வேறொன்றும் அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை. ''நிரு நான் நேற்று எழுதின றிப்போட் 'டிரக்ரஸ்' மீட்டிங்கில் பெரும் ஆதரவைப் பெற்றிருக்கு அனேகமாக புரடக்ஷன் ... ''

''காணும் பசிக்குது வாங்க சாப்பிடலாம்,, பட்டென்று எழும் போது அவனுக்கு அலுத்துப் போகும்.

''வினுடியர் நாளைக்கு நம்ம ஸொசைட்டி டினர்டான்ஸ் இருக்கு நீங்கள் நேரத்திற்கு வர வேண்டும்'' ஓ ஐ ஆம் சிக் ஓப் திஸ் திங்ஸ்'' (Oh I am sick of these things) அவனின் பதில் அவளின் ஆசைக்குமிழிகளை உடைத்து வேடிக்கைபார்க்கும், ஒவ்வோர் சின்ன விஷயங்களிலும் அவர்கள் வேறுபட்டு நின்றார்கள். அவளால் அவனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவனால் அவளைப் புரிய வைக்கவும் முடியவில்லை. முடிவு! ஒரேவீட்டில் இரு துருவங்கள் சமுதாய சம்பிரதாயங்களுக்காக வாழ்ந்துகொண்டிருக்கின்றன.

காலின் வலி அவனை நிஜ உலகத்திற்குத் திருப்புகிறது ஒருமாதத்திற்கு முன் எற்பட்ட விபத்து பெரியாஸ்பத்திரியின் ''பேயிங்'' வாட்டில் படுக்கச்செய்து விட்டது. அவன் அறையைச் சுற்றி கண்களைச் சுழல விடுகிறான். அவனுக்காக பிரத்தியேகமாக அமர்த்தப்பட்டிருக்கும் ''அட்டன்டன்', அறையை ரொம்ப அழகாக அழகுபடுத்தியிருக்கிறாள். அவனுக்குப் பிடித்த வெண்மையான ''ஒக்கிட்'' மலர்கள், ரைம்ஸ் பத்திரிகை, மெத்தென்ற வெண்விரிப்புகள் நிருபா அவனுக்காகச் செய்

வித்திருப்பவைகள் ஆனாலும்... ஆனாலும் ......

"ம் ...ம் ... வேண்டாம் காணும் மீனா" "மீனா"! ...... பட்டென்று குரல் வந்ததிசையை நோக்குகிறான் அவளேதான்... ஐந்து வருடங்கட்கு முன் அவன். உதறித்தள்ளிய அதேமீனா சோற்றுப் பீங்கான் ஒருகையிலும் குழைந்த சோறு மறுகையிலுமாக எதிர்க் கட்டில் நோயாளியுடன் கெஞ்சுகிறாள். "சாப்பிடுங்கள் நித்தி, கொஞ்சம்.. ம் எங்கே எனக்காக செல்லமாகஅவன்முகத்தைத்திருப்பி, சாப்பிடமறுக்கும் அவனுக்கு ஊட்டுகிறாள் அதிக நாட்களுக்குப்பிறகு சாப்பிட்டதாலோ என்னவே அவன் களைத்திருக்கவேண்டும் நெற்றியிலிருந்து வழியும் வியர்வையை அவள் துடைத்துக் களைத்துப்போன அவனை தன்னில் சாத்திக்கொள்கிறாள். மீனா ஐ ஆம் ரூ லக்கி ரூபி யுவர் ஹஸ்பெண்ட். அவன் முணுமுணுப்பது வினோதனுக்குத் தெளிவாகக் கேட்கின்றது.

அந்த அறையில் பூக்கள் இல்லை, ஆடம்பரமில்லை, கொல்லும் வேதனையில் துடிக்கும் ஒரு கணவனும், அவனின் ஒவ்வோர் அணு வேதனைக்கும் அன்பால் ஒத்தடம் கொடுக்கும் மனைவியும் ... ... வினோதன் மீனாவின் உண்மையான பெறுமதியை உணர்ந்தவனாய் தன் மெலெழும் கசப்பையும் கோபத்தையும் சாப்பாட்டின்மேல் கொட்டுகிறான். "எனக்குச் சாப்பாடு வேண்டாம்".

பாணும் பருப்புக் கறியுடனும் வீட்டில் வாடும் தன்குழந்தைகளை நினைத்தவாறே வினோதனுக்குச் சாப்பாடு எடுத்துவைத்த "அட்டென்டன்" அதிர்சியுடன் அவனை நோக்குகிறாள். ஏன் ஐயா .. ..? "ஒ ரேக் இட் அவுட்" ... ரொம்ப சாந்தமான அவன் இன்று ஏன் இப்படிக் கத்துகிறான் என்று புரியாமல் அவள் எல்லாவற்றையும் மீண்டும் மூடிவைக்கிறாள்.

விஸிட்டஸ் பெல்! மடியில் குழந்தையாகத் தூங்கும் தன் கணவனை மென்மையாகத் தலையணையில் தூங்கவைக்கிறாள் மீனா. நித்தி அந்தச் சின்ன அசைவில் எழுந்து விட்டான் போலும். "ஐந்து மணிக்கு வாறன் நித்தி" குழந்தையிடம் விடைபெறுவது போல் அவனைச்சமாதானப் படுத்திவிட்டு தன் நம்பிக்கையுடன் அவள் நடக்கிறாள். வினோதன் ஏக்கத்துடன் அவளைப் பார்கிறான்.

( யாவும் கற்பனை )

(பேட்டி)

# இதயங்கள் பேசுகின்றன.

— பேட்டியும் தொகுப்பும்: செல்வி. மல்லிகா குழுவினர் —

திரு. திருமதி ………… இருவரும் சமீபத்தில்தான் திருமணமானவர்கள். கணவர் ஒரு வர்த்தகப்பட்டதாரி, மனைவி சரித்திரம் சிறப்புப் பட்டதாரி. இருவரும் நகரின் இருவேறு பிரபல கல்லூரிகளில் கற்பிக்கின்றனர். மனைவி பிறப்பிலிருந்தே கண்பார்வையற்றவர். கணவர் ஐந்து வடருடங்கட்கு முன்னர் பார்வை இழந்தவர். இத்தம்பதியினரை நாம் சந்திக்கச் சென்றபோது மிகவும் அன்புடன் வரவேற்ருர்கள். திருமதி …… தேநீர் தயாரிக்க ஆயத்தமானபோது எமது குழுவில் இருந்த சகோதரியொருவர் "நீங்கள் சிரமப்பட வேண்டாம் நான் தயாரிக்கிறேன்" என்ருர். ஆனல் திருமதி …… "நீங்கள் எமது விருந்தினர்களாக வந்திருக்கிறீர்கள். எனவே நான் தான் தேநீர் தயாரிக்க வேண்டும்" எனக் கூறிவிட்டு, தேநீர் தயாரித்து எமக்கு வழங்கினர். பேட்டியின் போது கணவர் எமக்குப் போதியளவு விபரங்களைத் தந்தபடியாற் போலும் மனைவி அதிகம் பேசவில்லை. எனினும் அவசியமான இடங்களில் அவர் தமது கருத்தைத் தெரிவிக்கத் தவறவில்லை.

இத்தம்பதியினரது தாம்பத்திய வாழ்வு பற்றி அறிந்து கொள்வதே எமது பிரதான நோக்கமாக இருந்தமையினல் பார்வை இழந்தவர்கள் தமது நாளாந்த அலுவல்களை எவ்விதம் செய்கிருர்கள். என்பது பற்றிய விடயங்களை இங்கு தவிர்த்துள்ளோம். இதயங்கள் பேசுவதை இனி இங்கு காண்போம்.

**கணவர்:-** நாம் ஒன்ருகப் படிக்கும் போதே எம் இருவருக்குள்ளும் உள்ளார்ந்த அன்புறவு ஏற்பட்டதை உணர்ந்து கொண்டோம். காதலுக்கு அடிப்படை எதிர்பால் கவர்ச்சிதான். அத்துடன் ஒரே உணர்வினல் பாதிக்கப்பட்ட இருவர் இணைந்துள்ளதை காதல் உலகில் காணக் கூடியதாக உள்ளது (உ+ம்: காதலில் தோல்வி கண்ட இருவர் வாழ்வில் இணைதல்) இந்த வகையில் நோக்கும்போது நாமிருவரும் ஒரேவித உணர்வினல் (பார்வை இன்மை) பாதிக்கப்பட்டவர்கள். எனவே நாம் ஒருவருக்கொருவர் துணையாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை எமது திருமணத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. இங்கு ஒருவர் மேல் ஒருவர் அநுதாபம் கொண்டுள்ளோம் என்பதனை விட இருவரினதும் சுய

நலமே ஒரு வகையில் காரண மெனலாம்.

எனக்கும் பார்வையுள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்து வைக்க எனது பெற்ருேர் எண்ணியிருந்தனரோ என்பது பற்றி எனக்கு நிச்சயமாகக் கூறமுடியவில்லை. ஆனுல் நாம் பதிவுத் திருமணம் செய்து கொண்டதாக அவர்கட்கு அறிவித்தபோது அவர்கள் தமது கவலையைத் தெரிவித்தனர். எனது மனைவியின் பெற்ருேர் முற்ருக எதிர்த்துள்ளனர்.

சமுதாயம் எம்மை இன்னமும் சரிவரப்புரிந்து ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வாழ்க்கையை வாழ கண் பார்வை எவ்வளவோ முக்கியமானது என சமூகத்தினர் பெரிதும் எதிர்பார்க்கின்றனர். சிலர் தம் முன்வினையால் கிடைத்த பயனை யனுபவிப்பதாகவும் கருதுகின்றனர். அத்துடன் அதே நிலையிலேயே எம் சந்ததியைப் பெருக்குவோம் என்றும், அதாவது எமக்குப் பிறக்கும் பிள்ளைகளையும் அந்நிலைக்குட்படுத்துவோம் என்றும் எண்ணுகின்றனர்.

அதன் கடினமான மொழிகளை நாம் பொருட்படுத்துவதில்லையாயினும் அச்சொற்கள், பார்வை இழந்தாலும் நாம் சிறந்ததொரு குடும்ப வாழ்வை அமைத்து மற்றவர்கட்கு முன்மாதிரியாக வாழ வேண்டும் என்ற உணர்வை வலுப்படுத்துவர்களும் சமுதாயத்திலிருந்து ஒதுங்கிப் போகாமல் வாழ வேண்டுமென அவர்கட்கு வாழ்வில்ஒருபிடிப்பினை ஏற்படுத்த விரும்புகிருேம். நாம் திருமணத்தில் இணைவதற்கு எமது நண்பர்கள் பெருமளவில் உதவியுள்ளனர். ஆனுல் அடிக்கடி எனது மனைவி கூறும் முக்கியமான மூன்று கருத்துக்கள் எமது குடும்ப வாழ்வென்னும் பயிருக்குச் சிறந்த உரமாக அமைந்துள்ளது. அவை: ஆழ்ந்த அன்பு, பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் தன்மை, ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் மனப்பான்மை.

எமது திருமணம் பற்றிய விடயத்தை எனது மனைவியிடம் கூறிய போது அவர் இரண்டரை மாதங்கள் கழித்தே தனது முடிவைத் தெரிவித்தார். இதிலிருந்து அவவுடைய தீர்மானங்களின் உறுதியையும் திரயோசித்து முடிவு செய்யும் இயல்பையும் நான் அறிந்து கொண்டேன். எனது முற்கோபக் குணத்திஞல் சில சமயங்களில் நான் அவசரமுடிவுகளை எடுப்பதுண்டு. ஆனுல் இவவுடைய துணை எனது இக்குறைபாட்டினை நீக்கி எம் வாழ்வை வளம்படுத்தும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**மனைவி:** திருமணம்பற்றிஆரம்பத்தில் நான் எதுவும் யோசிக்கவில்லை. அவர் இதுபற்றி என்னிடம் பேசிய போது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. பெற்ருேருட்பட சமுதாயத்திலிருந்து இவ்வளவு தூரம் பிரச்சனைகள் வருமென்று எதிர்பார்க்கவில்லை.

நமது திருமணம் ஒருவாறு நடந்தேறும் என்றும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் மனநிலை இருந்தால் போதுமென்று எண்ணினேன். அதன்படி அத்தகைய அம்சங்கள் எமக்குள் காணப்படுகின்றன.

இருவரும்:

பொருளாதார நிலையை உத்தேசித்தும்—மனைவியின் தொழில் செய்யும் உரிமையைக் கவனத்திற் கொண்டும்—எம்மைப் போன்ற குறைபாட்டினை உடையவர்கட்கு கல்விகற்பதற்காகவும் — பார்வை இழந்தபெண்களும் சிறந்த முறையில் ஒரு தொழிலினைச் செய்ய முடியும் என்பதனை எடுத்துக் காட்டுவதற்காகவும் மனைவி தொழில் பார்ப்பதை இந்தக் கணவர் ஆதரிக்கின்றார்.

எமக்குள் சில சமயங்களில் அரசியல், இலக்கியம் போன்ற விடயங்களில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படுவதுண்டு. ஆயினும் இவை எம்மிடையே மனஸ்தாபத்தினை ஏற்படுத்த நாம் இடமளிப்பதில்லை.

இருவரும் கிறீஸ்தவ மதத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சார்ந்தவர்கள். ஆயினும் ஒவவொருவருடைய மதச்சுதந்திரத்தைக் கருத்திற்கொண்டும் பிற்காலத்தில் எமது பிள்ளைகள் மத்தியில் மதப் பிரச்சனைகள் ஏற்படக்கூடாதென்பதாலும் இவர்களின் திருமணத்தின்போது எவ்வித மதச்சடங்குகளும் இடம்பெறவில்லை.

'தம்மைப் போன்று பார்வையற்றவர்களின் வாழ்க்கையை வளம்படுத்தும் சமூகசேவைப் பணிகளிலும் இருவரும் ஈடுபாடு கொண்டுள்ளனர். எழுத்தாற்றல் உள்ள எனது மனைவியின் வேலைகள் சில இச் சமூகப்பணியினால் தடைப்பட்டுள்ளன வாயினும் நாம் அதனை அதிகம் பொருட்படுத்தவில்லை'. வெளிநாடுகளில் எம்மைப் போன்றோர் இலகுவான முறையில் கல்வி கற்கவும், திறமைகளை வளர்க்கவும் அதிக வாய்ப்புகளுண்டு. அத்துடன் இங்கு போலல்லாது அங்கு எம்மை மனிதர்களாக மதிப்பார்கள் என்பதாலும் வெளிநாட்டிற்குச் செல்லும் எண்ணமும் உண்டு. நிச்சயமாக ஆடம்பர வாழ்வைக் கருத்திற் கொண்டு நாம் அங்கு போக மாட்டோம்.

இப்பேட்டியை ஒழுங்கு செய்தவருக்கும் பேட்டியளித்த தம்பதியினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள்.



# நான் பதில்கள்

— தருபவர்: எம். போல் நட்சத்திரம் —

கே: நான் ஒரு இளைஞனை மூன்று வருடங்களாகக் காதலிக்கின்றேன். நாங்கள் இருவரும் அடிக்கடி சந்திப்பதில்லை இளைஞனின் வீட்டில் எங்கள் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். சந்தித்துப்பேசுவதற்கு பிரச்சனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கு முடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம். இந்நிலையில்நாங்கள் இருவரும் சந்தித்து 4 மாதங்கள் ஆகின்றன. சந்திப்புக்கள் குறைவதால் அன்பு பாதிக்கப்படுமா? இந்நிலையில் இளைஞனும் என்னைச் சந்திப்பதற்கு முயற்சி எடுப்பதில்லை. 'நான்' ஆசிரியரே என்னை அன்பு செய்யும் இளைஞனை நான் நம்பலாமா? சந்திப்புக்கள் குறைவாக இருக்கின்றபடியால் அதனால் விளைவுகள் ஏதும் ஏற்படுமா?

யாழ்வாசி

ப: தங்கையே! இளைஞனை நீங்கள் தான் 3 வருடங்களாகக் காதலிக்கிறீர்கள் என்கின்றீர்கள். அதேவேளை இளைஞன் உங்களைக் காதலிப்பதாக கூறவில்லையே. ஆகையால் உங்கள் இருவரதும் காதலில் எனக்கே சந்தேகம் வருகின்றது. ஒரு தலைபட்சமாகக்காதல் இருக்காதென்று 3 வருடங்களாக நீங்கள் அறியவில்லையா? பெற்றோர் இளைஞனுக்கு தடை விதித்தாலும் உண்மைக்காதல் அவன் இதயத்தில் இருந்தால் எப்படியும் உங்களைச் சந்தித்துப் பேசவும் கருத்துக்களை பரிமாறவும் முயற்சி செய்வான். அவன் உங்களை நேசித்தால் ''அன்னையென்ன தந்தையென்ன உன்னைக் கண்டபின்னாலே'' என்று பாடவும் மாட்டானா?

எனவே தங்கச்சி நீங்கள் அவரை நம்புவதற்கு முன்னர் சந்திப்புக்களை அதிகரிக்க முயற்ச்சிகள் எடுப்பதற்கு முன்னர் ஒரு 5 நிமிடங்கள் செலவழித்து நீங்கள் என்னைக் காதலிக்கின்றீர்களா என்று அந்த இளைஞனைக் கேட்டுவிட்டு மறு கேள்வியை 'நான்' மஞ்சரிக்கு எழுதியனுப்புங்கள். கட்டுப்பாடுகள், தனிமை, தோல்விகள், பிரச்சனைகள், உண்மையான உயிர் கொடுக்கும் காதல் இத்தனையையும் தாண்டுவதற்கு ஒருவனுக்கோ ஒருத்திக்கோ வலிமையில்லாமல் விட்டால் அவர்கள் காதலிக்கவே கூடாது. உங்கள் புதிய முயற்சிக்கு 'நானின்' வாழ்த்துக்கள்.

**கே: உள்ளத்தின் கவலைகள் ஒரு மனிதனின் அமைதியைப்பறிப்பது மட்டுமன்றி அவரின் நுண்ணறிவு ஞாபகசக்தியையும் பாதிக்குமா? சம்பவங்கள் ஒரு மனிதனின் பிறழ்வுகளை ஏற்படுத்தும் வேளை அந்த சம்பவங்களை இனம் காணமுடியுமா?**

S. பொற்கிளி
யாழ்ப்பாணம்.

தங்யையே மனக் கவலைகள் மனிதவாழ்க்கையில் பின்னிப் பிணைந்த, திவலைகள் அவன் வெறுத்தாலும்சரி எதிர்பார்க்கா விட்டாலும் சரி, அவனைச் சந்திக்கும் வாழ்க்கையின் கருமேகங்கள் வைத்தியனும், ஆலோசகனும், சிந்தனையாளனும், இலகுவாக குணப்படுத்த முடியாத வியாதி தான் கவலை. கவலையைகண்டால் கடந்து செல்ல முயற்சிக்கிறான் ஒருவன். கவலையிலிருந்து விடுபட முடியாதென்று தவிக்கின்றான். இன்னொருவன் கவலைதான் என் வாழ்வு என்று கண்ணீர்விடுகின்றான் வேறொருவன். ஒட்டு மொத்தமாக கவலை ஒரு வியாதி. கவலைகள் வெவ்வேறு வடிவங்களில் மனிதனைச் சந்திக்கின்றன. வியாதி, தனிமை, வறுமை, இயலாத்தன்மை, அறிவின்மை, கைவிடபட்ட நிலை, இழப்பு, வரட்சி, மனமுறிவுகள் ஏமாற்றங்கள் போன்ற கவலைத் துளிகளில் மனிதன் மூழ்கும் போது கவலை அவனது ஆளுமையை வெற்றி கொள்கின்றது. இவைகள் அனைத்தும் அவனுக்கு வாழ்வாக தென்படும் போது, கவலைதான் என் வாழ்வு என்று அவன்முடிவு செய்கின்றான். அப்போது நிச்சயமாக அவனுள்ளத்தில் அமைதியின்மையும் சிந்தனையில் சொல்லில் செயலில் பிறழ்வுகள் ஏற்பட்டு அவற்றில் பொருந்தாத நிலையொன்று வளர்கின்றது. அப்போது அவனதுநாட்டம் ஈடுபாடுகள், நினைவுகள் எல்லாம் படிப்படியாக வலுவிழக்கின்றன. இதன் விளைவாக ஒன்றிலும் பற்றற்ற நிலை ஏற்படுவதோடு நினைவாற்றல், ஞாபகசக்தி, நுண்ணறிவு என்பனவும் வெகுவாக பாதிப்படைகின்றன.

மனிதனுடைய செயற்பாடுகளைக் கண்டு அவனுடைய ஆளுமையின் தாக்கத்தையோ அல்லது வளர்ச்சியையோ ஓரளவிற்கு இனங்கண்டு கொள்ளலாம். உளவியலாளர்கள் பிரெய்ட் எரிக் போர்ண்ஸ் என்பவர்களின் ஆய்வுகளின்படி மனித செயற்பாடுகள் அனைத்தும் அவனது உள்ளரங்கத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகின்றன. ஆகவே பிறழ்வு நிலையைக் கொண்டு பிறழ்வுநிலையை ஏற்படுத்துகின்ற சம்பவங்களையும் காரணங்களையும் அறிய முடியும் என்று தான் சொல்ல வேண்டும். அத்துடன் அத்தகைய சம்பவங்களுக்கும் காரணங்களுக்கும், ஆற்றுப்படுத்தல் (Counselling) மூலம் நிவாரணமும் செய்யலாம். ஆனால் ஒருவன் தனது வாழ்க்கையை ஒளிவு மறைவின்றி துலாம்பரமாக இன்னொருவனுக்கு வெளிப்படுத்தும்போதுதான் வியாதிகளைக் குணப்படுத்துவது இலகுவாகும். இதை உளவியல் ரீதியில் கொடுக்கல் வாங்கல் என்பார்கள்.

**கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். அவளும் எனனைப் பார்த்து என்னோடு பழகினாள், காதலித்தாள் நாம் இருவரும் கடல் நீர் வற்றமுடியாதது போல் என்றுமே பிரியாமல் இருக்கவும் வாழவும் ஆசைப்பட்டோம். அவளோ என்னைத்தவிர வேறு யாரையும் கூட விரும்பவில்லை. ஆனால் சில பிரச்சனைகள் வந்தபடியால் அவளது வீட்டாருடன் அவள் என்னைவிட்டு பிரிந்து அக்கரை சென்றுவிட்டாள். கடைசியாக அவள் என்னை எங்கிருந்தாலும் மறக்கமாட்டேன் என்றும் எப்படியும் ஒன்று சேர்வோமென்றும் எழுதியிருந்தாள். எமது இரகசியக் கடிதப்பரிமாறல்கள் அவளது வீட்டாருக்கு தெரிய வந்து விட்டது. வீட்டார் எமது திருமணத்திற்குச் சம்மதிக்கிறார்கள் இல்லை இந்நிலையில் எமது காதல் திருமணம் நிறைவேறுமா? அவளோ இந்து. நான் ஒரு கிறிஸ்தவன்.**

S. **அன்ரனிகுமார்**
பண்டாரவளை

ப: தம்பி குமார், உங்கள் இருவரதும் நிலை மிகவும் மனிதத் தன்மை மிக்கதொன்று. தூய்மையான, உணர்ச்சிவசப்படாத, இடையில் அறுந்து விடாத காதலால் நீங்கள் இருவரும் சங்கமமாயிருக்கின்றீர்கள் என்பது தெளிவாகின்றது. பிரிவோ எதிர்ப்புக்களோ இடமாற்றமோ உங்கள்காதலை அறுத்துவிடவில்லை யென்பது பாராட்டக் கூடியவிடயம். இப்படியே தொடர்ந்தால் உங்கள் திருமண வாழ்க்கையிலும் நீங்கள் பிரமாணிக்கமான முறையிலே ஒன்றித்திருப்பீர்கள்.

ஆனால் திருமணம் என்பது பெற்றோர் பிள்ளைகளின் விருப்பத்திற்கு மாறாக வற்புறுத்திச் செய்து வைப்பதொன்றல்ல. பிள்ளைகளின் மகிழ்ச்சியிலும் நிறைவான வாழ்விலும் நாட்டம் கொண்ட பெற்றோர்கள் தங்கள் அபிப்பிராயங்களை புத்திமதிகளைக் கூறுவார்களே தவிர கட்டாயப்படுத்த மாட்டார்கள். இந்த இக்கட்டான நிலையிலும் உங்கள் காதல் திருமணம் நிறைவேறுமா என்று என்னைக் கேட்டு பதிலை எதிர்பார்ப்பதை விட உங்கள் திருமணத்தைப்பற்றி நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். இரண்டாவது நபர் ஒருவர் உமது எதிர்காலத்தை பற்றி தீர்மானிப்பது இலகுவான காரியமல்ல. ஆகையினால் தனது பெற்றோர்களின் மனநிலையை உமக்குச் சார்பாக மாற்ற வேண்டியது உமது காதலின் கடமையாகும்.

'காதலுக்கு சாதியில்லை மதமுமில்லையே' என்ற பாடல் உங்கள் கேள்வியின் கடைசிப் பகுதிக்குப் பதிலாக அமைகின்றதல்லவா? எத்தனை வருடங்கள் சென்றாலும் எதிர்ப்புக்கள் தொடர்ந்தாலும் உமது காதலி நிச்சயம் உமக்காக காத்திருப்பாளென்பது நீங்கள் கூறும் அவளது மனோநிலையிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டியது. நம்பிக்கை மெய்யாகட்டும்.

**கே: எனக்கு வயது 17. ஒருவர் என்னைத் தான் விரும்புவாதாகவும், திருமணம் செய்வதாகவும் கூறினார். ஆனால் நான் இதுவரையில் யாரையும் மனதால் கூட நினைக்கவில்லை. அவரின் விருப்பத்திற்கு சம்மதிக்கவுமில்லை. ஆனால் அவர் எப்படியாவது அடைந்தே தீருவேன் என்று திரிகின்றார். இதனால் நான் மிகவும் குழம்பியுள்ளேன். எனக்கு ''நான்'' தரும் அறிவுரை என்ன?**

**செல்வி R. S**
பாஷையூர்

ப: தங்கையே! வாழ்க்கையில் நீங்கள் விரும்பாதவர்கள்—ஏன் எதிர்பார்க்காதவர்கள் கூட உங்களைவிரும்பலாம்;காதலிக்கலாம். இது மனிதவாழ்க்கையில் இடம் பெறும் சர்வ சாதாரண நிகழ்ச்சிகளில் ஒன்று. மனத்தினால் எண்ணத்தினால் கற்பனையினால் கூட ஒருவன் ஒருத்தியை காதலிக்கலாம். இந்த இளைஞனைப் பெறுத்தவரையிலும் அப்படியான காதல் தான் மேலோங்கி நிற்கின்றது. சில வேளைகளில் இந்த ஒருதலைப் பட்சக் காதல் தீவிரமடையும் போது எப்படியாவது காதலியை அடைந்து விடவேண்டுமென்ற எண்ணம் நிச்சயமாக வரும்.

நீங்கள் உண்மையாக இந்த இளைஞனைக் காதலிக்காது விட்டால் குழம்பவேண்டிய அவசியமில்லை உங்கள்பெற்றோரிடமோ அல்லது யாராவது பெரியவர்களிடமோ உங்கள் பிரச்சினையை சொல்லி அந்த இளைஞனுக்கு உங்கள் மனப்பாங்கை வெளிப்படுத்தலாம். அத்தோடு அவ்விளைஞனும் இப்படியான நிகழ்ச்சி காதலாக இருக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். வற்புறுத்தி ஒருத்தியின் விருப்பத்திற்கு மாறாக அவளை மணந்து கொண்டாலும் திருமணவாழ்வு அன்பு வாழ்வாக இருக்கமுடியாதென்பதையும், மனவிரக்திகள் நிறைந்த வாழ்வாக இருக்குமென்பதையும் அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பயப்படாமல் பெற்றோர் மூலமாக ஒருநாளைக்காவது அந்த இளைஞனோடு பேசி கருத்துக்களைப் பரிமாறி உங்கள் மனநிலையைத் தெரிவியுங்கள்.

●

(உளவியற் தேர்வு)

## உமது தாம்பத்திய வாழ்க்கை ஒழுங்கமைக்கப்பட்டதா?

S. டேமியன் O.M.I., M.A.

''ஆம்'' அல்லது ''இல்லை'' என பதில் அளியுங்கள்.

1. அன்பினையே அடித்தளமாக வைத்து எனது குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றேன். (———)
2. முக்கிய தீர்மானங்களை எடுக்கும் போது நான் தனியனுகவே நின்று செயற்படுகின்றேன். (———)
3. சந்தேகம் பிறக்கும்போது உடனுக்குடனே அதனைத் தீர்த்துக் கொள்ளுகின்றேன். (———)
4. பிரச்சனைகள் பிறக்கும்போது அவற்றை எதிர்கொள்ள தவறுவதோடு தப்பியோட முயர்ச்சிக்கின்றேன். (———)
5. தினமும் எமது குடும்ப வாழ்க்கையில் குறைகூறும் பழக்கம் உடையவனுக காணப்படுகின்றேன். (———)
6. எனது வாழ்க்கைத் துணைவரை அவரா(ளா)கவே ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு உடையவனு(ளா)க காணப்படுகின்றேன். (———)
7. எனது அவரி(ளி)ல் குறைகள் பலவீனங்கள் காணப்படும்போது என்னில் சகிப்புத்தன்மை மேலோங்கி நிற்கின்றது. (———)
8. எனது தாம்பத்திய வாழ்வை திட்டமிட்டு ஒரு ஒழுங்கமைப்புடன் செயல் படுத்தி வருகின்றேன். (———)
9. கோப உணர்ச்சிகளும் வெறுமை உணர்வுகளுமே என்னில் மிகையாக காணப்படுகின்றன. (———)
10. அவரி(ளி)ன் மகிழ்ச்சியே எனது மகிழ்ச்சி என்ற மனப்பாங்கு என்னில் கூடுதலாக காணப்படுகின்றது. (———)

2, 4, 5, 9, ஆகியவைகளுக்கு 'இல்லை' எனவும் ஏனையவைகளுக்கு 'ஆம்' எனவும் பதிலளித்திருந்தால் ஒவ்வொன்றிற்கும் 10 புள்ளிகள் கொடுக்கவும்.

80 புள்ளிகளுக்குமேல் ; மிகவும் திறமை.

60–80 புள்ளிக்கும் ; நன்று.

ஏனையோர் உங்கள் குடும்ப வாழ்க்கையில் நல்லுறவை வளர்க்க கூடுதலான முயற்சி எடுக்க முற்படுங்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இலக்கம்: 16

5 6 × 6 ஆகுமாறு சதுரங்களை அமைக்கவும்.
இடமிருந்து வலமாக 1 முதல் 30 வரை இலக்கமிடவும்.
அடைக்கவேண்டிய சதுரங்கள்: 20, 25

**இடமிருந்து வலம்:**

1—6, 6—24 (மேலிருந்து கீழ்) படிக்கும்போதே நாட்டின் தலைவனாக வரவேண்டும் அடிமைத்தளையை உடைத்தெறிய வேண்டும் என்ற உணர்வுடன் உழைத்த உத்தமர் ஒருவரின் பெயர்.

26 – 30 இதுகள் வாழ இன்றியமையாதவை காற்றும் நீருமாகும்.

**மேலிருந்து கீழ்:**

1—19 மனவிரக்தியுற்றவருக்கு இது அளித்து ஆதரவு கொடுப்பவனே ''நான்''

2—14 இயக்கங்கள் மக்களின்பொதுநன்மைக்கு என்பதை உணர்ந்து தங்களுக்கிடையே இது ஏற்படுவதை தவிர்க்க வேண்டும்.

3—21 வங்காளவிரிகுடாவிலுள்ள கீழத்தேசபெயர்போனநாடொன்றின் தலைநகரம்.

4—22 கடந்த இனக்கலவரத்தின்போது மனிதாபிமானமே இல்லாத இவர்கள் தமிழ்மக்களின் உயிர்களையும், உடைமைகளையும் மிருகத்தனமாகச் சூறையாடினர்கள்.

**கீழிருந்து மேல்:**

29—5 குடும்பம் ஒரு .............. என அழகாக ஒரு கவிஞனல் வர்ணிக்கப்படுகின்றது.

# வாசகர் பூங்கா

**தூரத்திலிருந்து.**

எனது எண்ணக்கனவினில் இன்றும் வண்ணம் கெடாமல் நின்று வாழ்கின்ற என் அன்பு ''நான் உளவியல் மஞ்சரி''க்கு நல் வாழ்த்துக்களை வழங்கி நிற்கின்றேன். கானகத்தில் வாழ்ந்த தோகை மயில் கண்டுகொண்ட காரிருள் மழைமுகில் போல ''நான்'' எனும் மலர் மங்கை எனக்கு இந்தப் பாலைவனத்திலே பருவக் காதல் பாடும் இளம் தென்றலாக தூது சொல்லச் செல்லும் தோழியாக இருந்து வருகின்றாள். என் உள்ளத்தில் உறங்காது என் உணர்வுகளில் உறைந்து வாழுகிற மலராய் நீ வாழ எனது ஆசிகள்

—கரவையூர் குணம்
பாகிஸ்தான்

**இளமையின் சங்கமம்:**

வைகாசி - ஆனி மாத இதழ் என் உள்ளத்தில் ''பசுமரத்தாணி போல'' பதிந்து விட்டது. இளமைப்பருவத்தில் மானிட வாழ்வில் ஏற்படும் கனவுகள் கற்பனைகள் ஆசைகள் போன்றன எவ்விதத்தில் இளமைக் காலங்களில் இதயத்தந்தியாக மீட்டப்படுகின்றது என்பதை ''நான்'' இதழில் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டும்போது உணரக்கூடியதாக இருக்கின்றது.

-யேக்கப் ஜெயந்தி
நெடுந்தீவு

**அணையாத தீபம்:**

யான் தங்கள் வைகாசி ஆனி மாத நான் இதழை வாசித்து இன்புற்றேன். இத்துடன் தாங்கள் கடந்த இதழின் கருத்துக்குவியல் 33ற்கு உரிய எங்கள் கருத்தை கேட்டிருந்தீர்கள் அத்தலைப்புக்குரிய அடியேனின் கருத்தை தங்கள் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். தரமானதாயின் பிரசுரித்து என் போன்றோரை ஊக்குவிப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

-பே. யன்சிராசா
உருத்திரபுரம்

**அன்புப் பைத்தியங்கள்:**

அன்புப் பைத்தியங்கள் சிறுகதையை படித்த எனக்கே பைத்தியம் பிடிக்கும் போல் இருந்தது. கதையின் முடிவு என்னைக் கண் கலங்க வைத்தது. அதை எழுதியார்த்த இந்து குஷ் அவர்களுக்கு எனது இதய பூர்வமான பாராட்டுகள்.

–F. சகுந்தலாதேவி
புங்குடு தீவு–10

பாராட்டுக்கள்:

இளமை பருவச் சிறப்பிதழ் சிறப்பாக இருந்தது குறிப்பாக ''நானும் ஒரு பெண் தானே'' சிறுகதையில் காலா காலத்தில் கழுத்தில் தாலி ஏறுத ஒரு கன்னிப்பெண்ணின் இதயக்குமுறல்களையும் அவளது எதிர்பார்ப்புக்களையும் காண முடிந்தது. அன்பு எவ்வளவு தூய்மையானது சக்தி வாய்ந்தது என்பதை ''அன்புப் பைத்தியங்கள்'' சிறுகதையில் காணமுடிந்தது இளமையின் இராகங்களும் ''இதயத்தில் ஒலிக்கின்றது. நானின் பதில்கள் மூலம் விரக்தியில், கவலையில், தனிமையில் வாடும் இதயங்களுக்கு ஒரு வித சுகத்தையூட்டி வாழ்வில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

செல்வி அ. பற்றிமாறேஸ்
முல்லைத்தீவு

# பேனு நண்பர்

★ S. சந்தியாகோ
Poon Saudi Ltd.
P. O. Box 718
Dammam 31421
SAUDI ARABIA.

பொழுது போக்கு:

பத்திரிகை, சஞ்சிகை வாசித்தல், தொலைக்காட்சி, பேனு நண்பர் தொடர்பு.

## நண்பர்கள் வேண்டியவர்கள் செய்ய வேண்டியவை

1. உங்கள் பெயர், முகவரி, பொழுது போக்கு ஏனைய தகவல் என்பனவற்றையும்,
2. 5×60 சத முத்திரைகளையும்,

''நான்'' முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தமது புகைப்படங்கள் 'பேனு நண்பர்' பகுதியில் வெளியாவதை விரும்புபவர்கள் 'புளக்' தயாரிப்பிற்காக 35/- ரூபாவைத் தமது விண்ணப்பங்களுடன் அனுப்புதல் வேண்டும். பாவனையின் பின் சம்பந்தப்பட்டவர்கட்கு 'புளக்' அனுப்பி வைக்கப்படும்.

# உளவளத் துணையாளர்

## (COUNSELLING - PSYCHOLOGIST)



★ உள்ளக் குமுறல்கள்,
★ உள்வளர்ச்சியில் பாதிப்புகள்,
★ உறவுகளில் முறிவுகள்

இவை போன்ற பிரச்சனைகள் உங்கள் வாழ்வில் பல தாக்கங்களை ஏற்படுத்துகின்றன; வருத்துகின்றன! அருட். திரு. S. டேமியன் O.M.I., M.A. அவர்கள் ஆலோசனையும், மனமருத்துவமும் அளிக்க கனடா பல்கலைக்கழகத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்று தாயகம் திரும்பியுள்ளார்.

இவரது இலவச சேவையைப் பெறவிரும்புவோர் தொடர்பு கொள்க.

அருட். திரு.
**S. டேமியன் O.M.I.,M.A.**
**"தொடர்பகம்"**
**657, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

சந்திக்கக்கூடிய நாட்கள்.
... ஞாயிறு; மு. ப. 9-0. — 12-00
பி. ப. 3-00 .-00

...வர்... சிங் அசோசியேற்ஸ், யாழ்ப்பாணம்